SPMC

# ஆண்டறிக்கை 2022

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

SPMC

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| அ.ம.உ.கூ. தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும் | 01 |
| எமது நோக்கும் பணியும் | 02 |
| எமது பயணம் | 02 |
| நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள் | 04 |
| தலைவரின் மீளாய்வு | 06 |
| பொது முகாமையாளர் விடுக்கும் செய்தி | 09 |
| பணிப்பாளர்கள் | 11 |
| நிறுவன கட்டமைப்பு | 16 |
| பணிப்பாளர்களின் அறிக்கைகள் | 18 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 20 |
| கூட்டிணை நிறுவன ஆளுகை அறிக்கை | 22 |
| பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று | 24 |
| அபாய முகாமைத்துவ அறிக்கை | 25 |
| நிலையான அபிவிருத்தி இலக்குகள் | 26 |
| கூட்டிணை சமூகப் பொறுப்புக்கள் | 28 |
| ளுீஆஊ இனால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் | 29 |
| கூட்டுமுயற்சி உற்பத்தி பொருட்கள் | 30 |
| முழுமையான வருமானக் கூற்று | 33 |
| நிதியியல் நிலைமை பற்றிய கூற்று | 34 |
| உரிமை முதல் கூற்றில் மாற்றங்கள் | 35 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 36 |
| நிறுவனத் தகவல்களும், விசேட கணக்கீட்டுக் கொள்கைகளும் | 38 |
| கணக்குகளுக்கான குறிப்பு | 47 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 63 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பற்றிய தலைவரின் கருத்துக்கள் | 74 |
| வரைபட மீள்நோக்கு | 85 |
| கடந்த 10 ஆண்டுகளின் நிதி தொடர்பான முக்கிய தகவல்கள் | 87 |
| கூட்டிணை தகவல்கள் | 88 |

# அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும்

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 2022ஆம் ஆண்டில் இலங்கை மக்களின் சுகாதார நலன்களுக்குத் தேவையான முக்கியமான மருந்து வகைகளை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதில் 35 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. அ.ம. கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள் 96 வகையான மாத்திரைகள் மற்றும் கூட்டுக் குளிகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்த உற்பத்திகளில் 56 உற்பத்திகள் இவ்வாண்டில் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு அரச கூட்டுத்தாபனம் அ.ம.கூ. ஆகும்.

**அதன் பிரதான நடவடிக்கைகள்**

1) ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கையைச் செய்துகொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல்.

(2) துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல்.

(3) முதலீட்டாளர்களாக வரவுள்ளோருடன் சர்வதேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்.

(4) மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

(5) வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல்.

(6) கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

சந்தைக்கு விடப்படும் எல்லா உற்பத்திகளும் எமது உள்ளக (SPMC) தரக்கட்டுப்பாடுகளுக்கு அமைவாக உள்ளதுடன் பிரித்தானிய மருந்தகவியல் (BP)/ ஐக்கிய அமெரிக்க மருந்தகவியல் (USP) தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்கின்றன.

தற்போதைய சிறந்த உற்பத்தி நடவடிக்கைகளின் (cGMP) ஒழுங்கு விதிகளையும் நடவடிக்கை முறைகளையும் நடைமுறைப்படுத்தல், ஒழுங்கான உள்ளக தரக்கட்டுப்பாட்டு ஆய்வின் மூலமும் தொழிற்சாலை மேற்பார்வை மூலமும் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றன.



# எமது நோக்கு

தெற்காசியாவில் மருந்து மற்றும் சுகாதார பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மாதிரி நிறுவனமாகத் திகழ்தல்

# எமது பயணம்

**1987**

500 மில்லியன் உற்பத்தி இயலளவை-க்கொண்ட அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்தல்
8 மில்லியன்.

**1992**

ஆரம்ப உற்பத்தி இயலளவைத் தாண்டுதல்
600 மில்லியன்.

**2007**

புதிய வேலை முறைமாற்றொன்றை அறிமுகப்படுத்தல்
1025 மில்லியன்.

**2009**

உற்பத்தி அளவு இரு மடங்கினால் அதிகரி
1194 மில்லியன்.

# எமது பணி

சர்வதேச தரத்திலான உயர்ந்த ரக பாதுகாப்பானதும் பயனுறுதியானதும் விலை குறைவானதுமாக மருந்துப் பொருட்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்காக உற்பத்தி செய்தல்

கடந்த 35 வருட காலத்தில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அதிசிறப்புநிலையை நோக்கி அர்ப்பணிப்புடன் பணியாற்றி பல்வேறு மைல் கற்களை கடந்துள்ளது.

த்தல்

**2013**

உற்பத்தி அளவு 2000 மில்லியனைத் தாண்டுதல் 2003 மில்லியன்.

**2020**

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (ஜைக்கா) உதவியுடன் உற்பத்தி இயலளவை முன்னேற்றுதல் 3015 மில்லியன்.

**2021**

லெவோதைரொக்சின் குளிகை உற்பத்திக்கென ஒதுக்கப்பட்ட வலயம் ஆரம்பித்தல்.

**2022**

புதிய 09 உற்பத்திகளை சந்தைக்கு விடுதல்

# நிதி மற்றும் செயல்பாட்டு சிறப்பம்சங்கள்

| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு முடிவு** | | |
| வருமானம் | 16,620,184,659 | 8,538,944,512 |
| மொத்த இலாபம் | 2,061,140,119 | 1,436,621,516 |
| தொழிற்பாட்டு இலாபம் | 1,253,361,675 | 1,087,055,386 |
| நிதி வருமானம் | 351,759,383 | 156,792,127 |
| வரிச்செலவுகள் | 620,740,598 | 229,141,993 |
| வரிக்கு முந்தைய லாபம் | 1,586,213,049 | 1,235,327,457 |
| மொத்த முழுமையான வருமானம் | 1,500,493,418 | 1,014,281,767 |
| | | |
| **நிதி நிலை** | | |
| இருப்புகள் | 3,018,074,553 | 1,624,026,442 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 1,436,015 | 1,767,448 |
| நடைமுறைச் சொத்துகள் | 9,910,297,183 | 5,616,580,803 |
| மொத்த சொத்துகள் | 14,013,711,229 | 8,680,301,991 |
| மொத்த உரிமை முதல் | 6,680,644,760 | 5,280,077,196 |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 3,232,668,011 | 2,745,439,516 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 4,100,398,459 | 654,785,279 |



**வருமானம்**
**16620**
**மில்லியன்**



**வரிக்கு முந்தைய லாபம்**
**1586**
**மில்லியன்**








**உற்பத்தி வெளியீடு**
**3302**
**மில்லியன்**



### விற்பனை புரள்வு




### வரிக்கு முன் நிகர லாபம்




### விற்பனை உள்ளடக்கம்




### வட்டி வருமானம்




### உற்பத்தி




### ஊழியர் எண்ணிக்கை



# தலைவரின் மீளாய்வு



2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமை, வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை என்பவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று ஆகியவற்றை பணிப்பாளர் சபை சார்பில் நான் பெரு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது பொதுமக்களுக்கான சாதாரணமாக பெற்றுக்கொள்ளத்தக்க விலைகளில் தரமான, பயனுறுதிமிக்க மற்றும் பாதுகாப்பான மருந்துக்களை தயாரிப்பதற்கான அர்ப்பணிப்புடன் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் 1987 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அ.ம.கூ ஆனது இலங்கையில் மிகப்பெரிய, முன்னணி அரச மருந்துப் பொருட்கள் உற்பத்தியாளராகும். தற்போது அ.ம.கூ பாரியளவிலான மருந்தக உற்பத்திகளை உள்ளடக்கியதாக மரபுப் பெயர்களின் கீழ் 96 வகையான மருந்துப்பொருட்களை உற்பத்திசெய்கின்றது. அ.ம.கூ. தயாரிக்கப்படுகின்ற அனைத்து உற்பத்திகளும் பிரித்தானிய பாமோகோபியா(BP), ஐக்கிய அமெரிக்க பாமோகோபியா (USP) மற்றும் அ.ம.கூ. தராதரங்களின் அடிப்படையிலான தேவையான தரத்தை கொண்டிருக்கின்றது. தற்போதைய சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (cGMP), ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் அமுலாக்கமானது உள்ளக தர கணக்காய்வு மற்றும் தொழிற்சாலை பரிசோதனை என்பவற்றினூடாக தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

அ.ம.கூ. மருந்துப் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலையானது நவீன ஜப்பானிய,

ஜேர்மனிய மற்றும் கொரிய நாட்டு இயந்திர சாதனங்களினால் வலுவூட்டப்பட்டிருக்கின்றது. உற்பத்தி தொழிற்சாலையானது மிகவுமே சிறந்த துப்பரவான சூழலை கொண்டிருப்பதோடு உலக சுகாதார தாபனம் மற்றும் தற்போதைய சிறந்த நடைமுறை தேவைப்பாடுகள் போன்றவற்றுடன் இயைந்து செல்கின்றது. அ.ம.கூ. தயாரிப்புகள் வைத்தியர்கள், மருந்தகர்கள் மற்றும் ஏனைய சுகாதார துறையிலுள்ள தொழில்சார் வல்லுநர்களினால் மதிக்கப்பட்டு, முன்னுரிமை வழங்கப்படுகின்றன. தரமான மருந்துப்பொருட்களின் தயாரிப்பாளராக எமது புகழுருவமே எமது வெற்றியின் பிரதான அம்சமாகும்.

### செயலாற்றுகை

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது 2022 ஆம் ஆண்டில் வரிக்கு முந்திய ரூபா 1,586 மில்லியன் குறிப்பிடத்தக் தேறிய வருமானத்தை பதிவு செய்தது.

### உற்பத்தி வெளியீடு

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஆகக்கூடிய வெளியீடாக 2022 ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி வெளியீடு 3302 மில்லியன் அலகு குளிகைகள் / கூட்டு குளிகைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### வருமானப் புரள்வு

2022 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானப் புரள்வு ரூபா 16,620 மில்லியன்களாகும். இதுவே அதன் ஆகக்கூடிய வருமானமாகும். மொத்த விற்பனைகளில் 84% வீதமானவை சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினுடையதாகும். இந்த பிரதான மூலத்திற்கு மேலதிகமாக, எம்முடன் பதிவுசெய்துள்ள தனியார் வினியோகத்தர்கள் 15% வீதத்திற்கும், எஞ்சியது 1% வீதம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்குமான விற்பனைகளாகவும் இருந்தன.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது பகிரங்க கூட்டுத்தாபனம் என்ற வகையில் பொதுத்திறைசேரியில் இருந்து எவ்வித உதவியுமின்றி இலாபங்களை உழைப்பதற்கு அதன் சொந்த மூலவளங்களை முகாமை செய்து கொள்ள முடியுமாயிருப்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு கூறவிரும்புகின்றேன்.

உண்மையில், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது 2022ம் வருடத்தில் திறைசேரிக்கு ரூபா. 100 மில்லியன் பங்களித்து பொதுக்கூட்டுத்தாபனத்திற்கான எமது பொறுப்பை நிறைவேற்றியிருக்கின்றது.

## அபிவிருத்திப் பணிகள்

### தொழிற்சாலை அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டில் அ.ம.கூ ஆனது 3,302 மில்லியன் குளிகைகளையும் கூட்டுக்குளிகைகளையும் உற்பத்தி செய்திருக்கின்றது.

### ஆராய்ச்சி மற்றும் மருந்து உருவாக்கம் அபிவிருத்தி

அ.ம.கூ ஆனது இவ்வாண்டுக் காலப்பகுதியில் பின்வரும் ஒன்பது தயரிப்புகளை வர்த்தகரீதியாக வெற்றிகரமாக உற்பத்திசெய்து, அவற்றை வெளியிட்டுள்ளது.

- அஸ்பிரின் GR குளிகைகள் BP 75 மி.கி
- மெ.்.பெனமிக் அசிட் குளிகைகள் BP 500 மி.கி.
- பிசொப்றொலொல் குளிகைகள் BP 5 மி.கி
- பிரட்னிசொலொன் குளிகைகள் 1 மி.கி.
- .்.புளுக்லொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி.
- ரொசுவெஸ்டெட்டின் குளிகைகள் IP 10 மி.கி.
- லொசர்டன் பொட்டாசியம் குளிகைகள் BP 25 மி.கி.
- சிற்றாகிளிப்ரின் குளிகைகள் BP 50 மி.கி
- லொறரடின் குளிகைகள் USP 10 மி.கி.

## மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் நலனோம்புகை

2022.12.31 ஆம் திகதியளவில் அ.ம.கூ. ஆனது 10 பயிலுநர்கள் மற்றும் 03 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உள்ளடங்கலாக 336 ஊழியர்களை கொண்டிருந்ததோடுஇ வர்கள் அ.ம.கூ. இன் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கீழ் வினைத்திறனான மற்றும் சுமூகமான இரு சுழற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அ.ம.கூ ஊழியர்களினால் கோரப்படுகின்ற அடிப்படை நலனோம்புகை வசதிகளை தொடர்ந்து வழங்கி வருகின்றது.

## உபாயமுறையும் எதிர்கால நோக்குகளும்

எமது பிரதான நோக்கம் யாதெனில் சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவு, அரச மருந்தக கூட்டுத்தாபனம், மருந்தகங்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்கள் ஆகியோரினால் கோரப்படுகின்ற மருத்துவப் பொருட்களின் துண்டிக்கப்படாத வழங்கலுக்கு ஏற்பாடு செய்வதாகும்.

ஹொரண, மில்லவயில் புதிய தொழிற்கூடத்தினை அமைப்பதனூடாக அதன் உற்பத்தி திறனை விரிவாக்குவதற்கு அ.ம.கூ எதிர்பார்த்துள்ளது. அதன்படி அ.ம.கூ பின்வரும் சொத்துக்கள் திரும்பல்தாபிக்க தீர்மானித்திருக்கின்றது.

- எலும்பியல் (orthopedic) மருந்து பொருட்களை தயாரிப்பதற்கான தொழிற்கூடம்
- புற்றுநோயியில் (oncology) மருந்து பொருட்களை தயாரிப்பதற்கான தொழிற்கூடம்
- வாய்மூல திண்ம மாத்திரை பொது மருந்து பொருட்களை தயாரிப்பதற்கான தொழிற்கூடம்

இந்த விரிவாக்கமானது உற்பத்தியை மேம்படுத்தவும், விற்பனை வருமானங்களை அதிகரிக்கவும், உற்பத்தி பரம்பலை விரிவாக்கவும், புதிய வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கவும், தொழிநுட்ப அறிவை மேம்படுத்தவும் அ.ம.கூ கூட்டாண்மை புகழுருவை உருவாக்குவதற்கும் ஆதரவளிப்பதாக இருக்கும்.

## நன்றி தெரிவித்தல்

இலங்கையில் மருந்தாக்க கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கான தொடரான அர்ப்பணிப்பிற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு பணிப்பாளர் சபையின் சார்பில் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கௌரவ சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல, மருந்துப் பொருட்கள் உற்பத்தி, வினியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் கௌரவ சன்ன ஜயசுமன ஆகியோருக்கு அவர்களது மதிப்புமிக்க வழிகாட்டல் மற்றும் ஆதரவுக்கும் எனது பாராட்டை தெரிவிக்கின்றேன். சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. ஜனக சந்திரகுப்தா, மருத்துவ பொருட்கள் உற்பத்தி, வினியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் செயலாளர் டாக்டர் ஆர்.எம்.எஸ். கே ரத்நாயக்க மற்றும் சுகாதார அமைச்சு, மருத்துவபொருட்கள் உற்பத்தி, வினியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் ஏனைய அலுவலர்களுக்கும் அவர்கள் வழங்கிய மதிப்புமிக்க வழிகாட்டலுக்கும் நாம் நன்றிகளை தெரிவிக்கின்றோம். நிதி அமைச்சின் செயலாளர்களான திரு. எஸ். ஆர். ஆட்டிகல, திரு. மஹிந்த சிறிவர்த்தன, பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. பி.ஏ.எஸ். அதுல குமார மற்றும் பொதுத் திறைசேரியின் பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்கும் நாம் பாராட்டை தெரிவிக்கின்றோம்.

எமது கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்கு பெருவரியாக பங்களிப்பு செய்த அரச மருந்துக் கூட்டுத்தாபனம் (ளீஊ), மருத்துவ வழங்கல் பிரிவு (ஆளுனு), தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவ தொழில்வாண்மையாளர்கள் உடன் நாம் மிகச்சிறந்த உறவுகளை கொண்டிருந்தோம் என்பதை நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2022 ஆம் ஆண்டில் சாதகமான பெறுபேறுகளை அடைவதில் அ.ம.கூ. பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், முகாமையாளர்கள், நிறைவேற்று பதவியணியினர் மற்றும் அனைத்து மட்ட ஊழியர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு பெரிதும் பாராட்டப்படுகின்றது.

இறுதியாக, கூட்டுத்தாபனத்தை வெற்றியை நோக்கி நகர்த்துவதில் தமது பெறுமதிமிக்க பங்களிப்பையும் வழிகாட்டலையும் வழங்கிய பணிப்பாளர் சபைக்கும் நான் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர். பி.பி.ஜி.பி.யு.இந்திரவன்ச**
**தலைவர்**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
**2022 பெப்ரவரி 28 ஆந் திகதி**

# பொது முகாமையாளர் விடுக்கும் செய்தி



அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், கடந்த 35 வருடங்களுக்கும் கூடுதலான காலமாக இலங்கையில் இயங்கி வருகிறது. இக் காலப்பகுதியினுள் எமது கூட்டுத்தாபனம் மருந்துகளின் சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அடிப்படையை வெற்றிகரமாக விருத்திசெய்து பலப்படுத்தியுள்ளது. அவ்வேலைத்திட்டத்தின் ஊடாக துரித வளர்ச்சி நோக்கில் செயற்படும் தேசிய மருந்தாக்கல் கம்பனியாக மிளிரும் கௌரவத்தை வென்றெடுக்க எம்மால் முடிந்தது.

கூட்டுத்தாபதனத்தின் வரலாற்றில் அதிகூடிய விற்பனவு அளவையும் (16 பில்லியன் ரூபா) இலாப அளவையும் (ரூ. 1.5 மில்லியன்) எய்தி, தமது விற்பனைகளிலும் வரிக்கு முந்திய தேறிய இலாபத்திலும் ஸ்திரமான வளர்ச்சியொன்றுடன் 2022 ஆம் ஆண்டில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள செயலாற்றுகை, மிகச் சிறப்பான ஒரு வெற்றியாக அமைந்ததென்பதைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன். மேலும், கூட்டுத்தாபனம் புதிய 9 உற்பத்திகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் தமது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையிலும் சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், மென்மேலும் வளர்ந்து முன்னோக்கிச் செல்லுமென்பதே எமது நம்பிக்கையாகும். 2022-2026 காலப்பகுதியினுள் ஹொரணை-மில்லேவ பகுதியை அண்டியதாக 'லோட்டஸ் / பாமா' கருத்திட்டத்தின் கீழ் புதிய 3 தொழிற்சாலைகளை அதாவது வாய்வழியாக உட்கொள்ளும் திண்ம மருந்து மாத்திரைகளை தயாரிக்கும் தொழிற்சாலையை (Oral Solid Dosage forms Plant), நிறுவுதல் எமது முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது.

முயற்சியாண்மையின் உள்ளார்ந்த பெறுமானங்களுடன் இணைந்ததாக பலம்பொருந்திய வேலை ஒழுக்கநெறிகளையும் பரந்தளவிலான உற்பத்திகளையும் கொண்டதாக காலத்திற்கேற்ற சிறந்த உற்பத்தி நடைமுறைகளுடன் (cGMP) கண்டிப்பான உடன்பாட்டுடன்கூடியதாக பணியாற்றி, இலங்கையில் தொழிற்படும் முன்னணி மருந்து வகை உற்பத்தியாளர்களிடையே அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இடம்பிடித்துள்ளது.

இறுதியாக, 2022 ஆம் ஆண்டில் எனக்களித்த ஒத்துழைப்பிற்காகவும் சேவைக்கான அர்ப்பணிப்பிற்காகவும் தவிசாளருக்கும், பணிப்பாளர் சபைக்கும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கும், பொதுத் திறைசேரியின் அதிகாரிகளுக்கும், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**எஸ்.டபிள்யு.ஜயசுந்தர**
**பொது முகாமையாளர்**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**

# பணிப்பாளர் சபை

டாக்டர். பி.பி.ஜி.பி.யு. இந்ரவன்ச
தலைவர்

டாக்டர். பந்துல விஜயசிறிவர்த்தன
பணிப்பாளர்

திரு.வீ.ஜீ.சமிந்த விக்கிரமரத்ன
பணிப்பாளர்

செல்வி யூ.எஸ்.கே. தெனவத்த
பணிப்பாளர்

திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க
பணிப்பாளர்



# பணிப்பாளர்கள்



**டாக்டர். பி.பி.ஜி.பி.யு. இந்ரவன்ச**
**தலைவர்**

டாக்டர் உத்பலா இந்திரவன்ச ஒரு மருத்துவ கலாநிதியாக இருப்பதோடு (ரஷ்யாவில் உள்ளவ் முன்னணி மருத்துவ பல்கலைக்கழகங்களில் ஒன்றான செச்செனோவின் மருத்துவ அகாடமியில் கற்ற) பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேவைக்கால பயிற்சியை நிறைவு செய்தவருமாவார்.

2007 ஆம் ஆண்டில் அவர், புலஸ்திபுர கிராமப்புற மருத்துவமனையில் கடமைப்பொறுப்பு மருத்துவ அதிகாரியாக, (5S) க்கான உற்பத்தித்திறன் மாகாண விருதை பெறுவதில் முன்னோடியாக இருந்த வேளை, டாக்டர்கள் வகுதி மற்றும் மருத்துவமனை வகுதி போன்றவற்றுக்கான சுகாதார சிறப்பு விருது ஆகியவற்றையும் அதே காலகட்டத்தில் அவர் வென்றெடுத்தார். இவர் 2009 ஆம் ஆண்டு முதல் தேசிய வைத்தியசாலையில், விபத்து சேவை பிரிவில் எலும்பியல் பிரிவில் பணியாற்றி வருகின்றார். அவர் 2019 டிசம்பரில் இருந்து இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியில் பணியாற்றுகிறார்.



**டாக்டர். பந்துல விஜயசிறிவர்த்தன**
**பணிப்பாளர்**

ஒரு உசாவுகை மருத்துவரான வைத்திய கலாநிதி பந்துல விஜேசிறிவர்தன, எம்.டி.(மருத்துவம்) இற்கான பிரதம பரீட்சகர், MCQ பிரதம குழுவின் தலைவர், AAAED குழு உறுப்பினர் மற்றும் 2005 ஆம் ஆண்டில் இலங்கை மருத்துவர்கள் கல்லூரியின் தலைவராக இருந்தமை போன்றவற்றுடன், அரசாங்க சுகாதார பராமரிப்பு துறையில் 33 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தை கொண்டவராவார்.

இவர் தற்போது தனியார் மருத்துவ பராமரிப்பு துறையில் முழு நேரமும் பணிபுரிகின்றார். வைத்திய கலாநிதி விஜேசிறிவர்தன தற்போது நாடளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மருத்துவர்கள் கல்லூரியூடான சத்திரசிகிச்சை மருத்துவ நடைமுறை வழிகாட்டுதல்களை அறிமுகம் செய்வதில் முன்னோடியாக இருந்தார்.

இவரது இந்த புகழுக்கு பல தேசிய மற்றும் சர்வதேச வெளியீடுகளுடன் வைத்திய கலாநிதி விஜேசிறிவர்தன 2000 ஆம் ஆண்டில் அவரது மருத்துவ ஆராய்ச்சிக்காக ஜனாதிபதி விருதை வென்றதோடு ரோயல் அவுஸ்திரேலிய மருத்துவர்கள் சிகிச்சை கல்லூ ரி மற்றும் தென் ஆபிரிக்காவில் உள்ள மருத்துவக் கல்லூரிகள் என்பவற்றினால் கௌரவ அங்கத்துவ விருதுகளையும் பெற்றுள்ளார்.

அவர் MBBS (கொழும்பு), MD (கொழும்பு) மற்றும் MRCP (ஐக்கிய இராச்சியம்) ஆகிய பட்டங்களை பெற்றுள்ளதோடு, அமெரிக்க மருத்துவர்கள் கல்லூரி மற்றும் இலங்கை மருத்துவர்கள் கல்லூரி என்பவற்றினதும் அங்கத்தவராவார்.



**திருமதி எஸ்.ஏ.சந்திரிகா குலதிலக**
**பணிப்பாளர்**

திருமதி எஸ்.ஏ. சந்திரிகா குலதிலக தற்போது முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார்

இவர் வணிகவியல் இளங்கலைப் பட்டத்தையும் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) மற்றும் இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகத்தின் நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திற்கான கணக்காய்வு பரீட்சகராகவும் தபால் திணைக்களத்தின் கணக்காளராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் அரச கணக்காளர்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராகவும், பணிப்பாளராகவும் பணியாற்றியிருப்பதோடு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் இந்திய அரசாங்கத்தின் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகளை பலப்படுத்தல் தொடர்பான செயலமர்வில் வளவாளர் ஒருவராகவும் இருந்திருக்கின்றார்.



**திரு.வீ.ஜீ.சமிந்த விக்கிரமரத்ன**
**பணிப்பாளர்**

திரு.வீ.ஜீ.ச. விக்கிரமரத்ன 2020 ஜனவரி மாதத்திலிருந்து அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின்பணிப்பாளர் சபையில பணிப்பாளராக பணியாற்றுவதோடு, SMI இன்ஜினியரிங் கோ. (பிரைவேட்) லிமிடெட்டின் நிறுவுனராக வியாபார முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவத்தை கொண்டிருக்கின்றார்.

இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (2005-2008), பொது அரங்காற்றுகை சபை, தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் (2008-2010) மற்றும் இலங்கை எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் (2012-2015) ஆகியவற்றின் பணிப்பாளர்சபை பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

தற்போது அவர் ஹரித டிவி நெட்வொர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் அரிகே (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் பணிப்பாளராக பதவி வகித்து வருகின்றார். இதற்கு மேலதிகமாக அவர் தேசிய புகையிரத அருங்காட்சியகக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.



**செல்வி யூ.எஸ்.கே. தெனவத்த**
**பணிப்பாளர்**

செல்வி யூ.எஸ்.கே. தெனவத்த தற்போது மருந்துப் பொருட்கள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளராக (நிர்வாகம்) பணியாற்றுகிறார்.

அவர் விவசாயத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தையும் (பேராதனைப் பல்கலைக்கழகம்) மற்றும் கருத்திட்ட முகாமைத்துவத்தில் பொது முகாமைத்துவ முதுமாணிப் பட்டத்தையும் (இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்) பெற்றுள்ளார்.

அவர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் உதவி ஆணையராகவும் (2000-2001) சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சின் பணிப்பாளர் ஒருவராகவும் (2001-2010) பணியாற்றியுள்ளார். 2010 ஆம் ஆண்டில் அவர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக (ஜனதிரிய) பணியாற்றினார். செல்வி. தெனவத்த, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (2015-2017) மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு (2017-2021) ஆகியவற்றில் சிரேஷ்ட உதவி செயலாளர் பதவியையும் வகித்துள்ளார்.



**திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க**
**பணிப்பாளர்**

திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க, 2022 ஏப்ரல் மாதத்தில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர், சிரேஷ்ட முகாமையாளர் ஒருவராகவும் பணிப்பாளர் ஒருவராகவும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராகவும் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 15 வருடங்களுக்கு கூடுதலாக சேவையாற்றிய அனுபவம் வாய்ந்தவராவார்.

கஹுட்டகஹ கிராபைட் லங்கா லிமிட்டட், பி.சி.சி. (லங்கா) லிமிட்டட், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராக பணியாற்றியுள்ள திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க, இதற்கு முன்பு பொது தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமையாளர ஒருவராகவும், டைம்ஸ் கார்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தின் கணக்காளர் ஒருவராகவும் பணியாற்றியுள்ளார்.

அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாக விஞ்ஞானமாணிப் பட்டமும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நிதித்துறை வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார்.

திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க, தற்போது நிதி அமைச்சின் திறைசேரி பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவராகவும், உதவிப் பணிப்பாளர் ஒருவராகவும் பணியாற்றுவதுடன், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராகவும் கடமையாற்றுகின்றார்.

முன் வரிசையில்

திரு ஆர்.எம்.ஆர்.எம்.ரனசிங்க
திரு ஆர்.தர்மதாச
திரு எஸ்.பி.ஜயவீர
திருமதி எஸ்.டபிள்யு.ஜயசுந்தர
திரு டாக்டர். பி. பி. ஜி. பி. யு. இந்ரவன்ச
திருமதி ஏ.ஜி.டி.எஸ்.அதுரலிய
திரு பி.டி.ஜயசுந்தர
திருமதி சி.டி.மகினாராச்சி
திருமதி ஏ.எம்.ரி.பி.குலசேகர

SPM

முகாமைத்துவ அணி



## பின் வரிசை

திருமதி ஏ.சி.பி.ஆனந்தகுமார
திருமதி முகாமைத்துவ அணி
திரு சமந்த விக்ரமசிங்க
திரு வை.எம்.பி. குமார
திரு ஜே.எம்.எஸ்.ஜயசுந்தர
திரு எம்.பௌரகம
திரு பி.வி.எச்.பி.எஸ்.குமார
செல்வி பு.தந்தநாராயண



# நிறுவன


தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர்
பொது முகாமையாளர்
பிரதி பொது முகாமையாளர் - உற்பத்தி
பிரதி பொது முகாமையாளர் - தரக்கட்டுப்பாடு)
பிரதி பொது முகாமையாளர் - மருந்து வடிவம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
பிரதி பொது முகாமையாளர் - பொறியியல்
முகாமையாளர் - உற்பத்தி
முகாமையாளர் - தரக்கட்டுப்பாடு
முகாமையாளர்- தர உறுதிப்படுத்தல்
முகாமையாளர் - மருந்து வடிவம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
முகாமையாளர் - பொறியியல்
முகாமையாளர் - தகவல் தொழிநுட்பம்
முகாமையாளர் - பாதுகாப்பு
மருந்தாக்க வல்லுநர்-உற்பத்தி
தரக்கட்டுப்பாட்டு அலுவலர்
தர உறுதிப்படுத்தல் அலுவலர்
இரசாயனவியலாளர்
ஒழுங்குமுறை விவகார அலுவர்
பொறியியல் உதவியாளர் (E/M)
போக்குவரத்து அலுவலர்
பொறியியல் உதவியாளர்(கணினி வன்பொருள்)
அமைப்பு ஆய்வாளர்

# கட்டமைப்பு


பிரதி பொது முகாமையாளர் - திட்டமிடல், மற்றும் கொள்வனவு
பிரதி பொது முகாமையாளர்
பிரதி பொது முகாமையாளர் - நிதி
பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள்
முகாமையாளர் - திட்டமிடல், மற்றும் கொள்வனவு
முகாமையாளர் - சந்தைப்படுத்தல்
முகாமையாளர் - நிதி
முகாமையாளர் - மனித வளங்கள்
முகாமையாளர் - பயிற்சி மற்றும் அபிவிருத்தி
சட்ட அலுவலர்
உள்ளக கணக்காய்வாளர்
மருந்தாக்க வல்லுநர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு)
சந்தைப்படுத்தல் அலுவலர்
நிதி அலுவலர்
மனித வள/நிர்வாக அலுவலர்
பயிற்சி மற்றும் அபிவிருத்தி அலுவலர்
பிரத்தியேக செயலாளர்
உள்ளக கணக்காய்வு அலுவலர்

# பணிப்பாளர்களின் அறிக்கை

2022 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான தமது அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது. கணக்குகள் 33-61 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## பிரதான செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு

- ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகையெ வேறு உடன்படிக்கையைச் செய்து கொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல்.

- துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல்.

- முதலீட்டாளர்களாக வரவுள்ளோருடன் சர்வதேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்.

- மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

- வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல். கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

## வணிக மீளாய்வு

2022 டிசம்பர் 31 அன்று கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளின் நிலைமை 34 ஆம் பக்கத்தில் உள்ள நிதிநிலைமை பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளது.

## புரள்வும் விளைவுகளும்

இவ்வாண்டுக்கான புரள்வும் விளைவுகளும் மற்றும் உரிமைப்பங்கில் மாற்றம் என்பன முறையே 33 ஆம் பக்கத்தில் உள்ள வருமானக் கூற்றிலும் உரிமைப்பங்கில் மாற்றம் பற்றிய கூற்று 35 ஆம் பக்கத்திலும் முறையே தரப்பட்டுள்ளன.

## நன்கொடைகள்

இவ்வாண்டில், கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நன்கொடைகளும் வழங்கப்படவில்லை.

## ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள்

இவ்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மாற்றம் 54 ஆம் பக்கத்தில் உள்ள நிதியியல் கூற்றின் குறிப்பு 10 இல் தரப்பட்டுள்ளது.

## பங்கிலாபம் / பங்களிப்பு

இவ்வாண்டில், பணிப்பாளர் சபையின் விதப்புரைக்கு அமைய கூட்டுத்தாபனத்தினால் பொதுத் திறைசேரியின் திரண்ட நிதிக்கு ரூபா. 100,000,000 வழங்கப்பட்டது.

## ஒதுக்கங்கள்

கூட்டுத்தாபனத்தின் மொத்த ஒதுக்கங்களும் அவற்றின் உள்ளடக்கம் என்பன 35 ஆம் பக்கத்தில் உள்ள நிதிக்கூற்றில் உரிமைப்பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளன.

## பணிப்பாளர்கள்

பணிப்பாளர் சபையானது சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. பணிப்பாளர்களில் ஒருவர் நிதி அமைச்சுப் பிரதிநிதியும் மற்றுமொருவர் சுகாதார அமைச்சின் பிரதிநிதியும் ஆவர். பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் 2020 தை மாதம் முதல் நியமிக்கப்பட்டனர். இந்தக் காலப்பகுதியில், பணிப்பாளர் சபையானது எட்டு கூட்டங்களை நடத்தியது. சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவரும் பணிப்பாளர் சபையும் பொறுப்புமிக்கவர்களாவர்.

| | |
|---|---|
| டாக்டர். பி.பி.ஜி.பி.யு. இந்ரவன்ச | - தலைவர் |
| டாக்டர். பந்துல சந்ரநாத் விஜயசிறிவர்த்தன | - பணிப்பாளர் |
| எஸ்.ஏ. சந்திரிகா குலதிலக (2022 பங்குனி வரை) | - பணிப்பாளர் |
| வி.ஜி. சமிந்த விக்ரமரத்ன | - பணிப்பாளர் |
| யு.எஸ்.கே. தெனவத்த | - பணிப்பாளர் |
| ஏ.ஆர்.விக்ரமசிங்க (2022 சித்திரையில் இருந்து) | - பணிப்பாளர் |

## கணக்கீட்டுக் கொள்கைகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் 38 - 46 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்குப் பாதிப்பில்லா விதத்தில் செயற்படுவதும் நாம் தொழிற்படும் சமூகத்தில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு பயன்மிக்க விளைவைக் கொண்ட உயர் தரத்திலான உற்பத்திகளை வழங்குவதும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும்.

## நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்துக்கும் ஊழியர்களுக்குமான எல்லா நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் ஐந்தொகைத் திகதியில் செலுத்தப்பட்டுள்ளன.

## ஐந்தொகைத் திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

நிதிக்கூற்றுகளில் திருத்தங்களை அல்லது வெளிப்பாட்டைத் தேவைப்படுத்தும் எவ்வித நிகழ்வும் ஐந்தொகைத் திகதியிலிருந்து இடம்பெறவில்லை.

## நடைபெற்றுக் கொண்டிருக்கும் அக்கறை

நடைபெற்றுக்கொண்டிருக்கும் அக்கறை எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன. எதிர்வுகூறக்கூடிய காலத்தில் கூட்டுத்தாபனத்தில் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதிய வளங்களைக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தியடைகின்றது.

## கணக்காய்வாளர்களை நியமித்தல்

1971ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வாளர் நாயகம், கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளராவார். 2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயற்பாடுகளின் வருடாந்த கணக்காய்வை அவர் மேற்கொண்டார்.

**டாக்டர். பி. பி. ஜி. பி. யு. இந்ரவன்ச**
**தலைவர்**
**இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
**28ம் திகதி மாசி 2023**

# கணக்காய்வுக் குழு அறிக்கை - 2022

2021.11.17 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறுமாறு பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட, அரசுவசமுள்ள தொழில்முயற்சிகளுக்கான கூட்டிணை நிருவாகம் பற்றிய வழிகாட்டல்களுக்கு அமைய கணக்காய்வுக் குழு (AC) நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி வழிகாட்டல்களுக்கு உரிய மாதிரியொன்றில் கணக்காய்வுக் குழு உரிமைப்பத்திரத்திற்கு அமைய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், சமர்ப்பித்தல், அதற்கு போதுமானளவில் வெளிப்படுத்தல்களைச் செய்தல் ஆகியவற்றுக்கும், நிதிசார் அறிக்கையிடல் பற்றிய தேவைப்பாடுகள், நிறுவன சட்டங்களின் தகவல் சார்ந்த தேவைப்பாடுகள், கம்பெனிகள் சட்டம், ஏனைய சம்பந்தப்பட்ட நிதிசார் அறிக்கையிடலுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளுடனும் தேவைப்பாடுகளுடனும் இசைவு தெரிவிப்பதற்கும், நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடு மற்றும் அபாய முகாமைத்துவ நடபடிமுறைகளை இலங்கை கணக்காய்வு நியமங்களின் நியதிகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதென்பதில் கவனம் செலுத்தும் செயலொழுங்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வுப் பணியின்போது செயலாற்றுகையை உறுதிசெய்வதற்கும், இடர்க் குழுவொன்று இல்லாத சமயத்தில் முக்கிய வியாபார மற்றும் நிதி சார் ஆபத்துக்களை அடையாளம் காணல், கண்காணித்தல், முகாமை செய்வதற்கும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் பிரதான முகாமைத்துவத்தில் பணியாற்றுவோருக்கும் உரிய தொடர்புடைய தரப்புக்கள் சார்ந்த கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய அறிக்கையிடலுக்குமான விடயங்கள் சம்பந்தமான தமது பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு பணிப்பாளர் சபைக்கு தேவைப்படும் ஒத்தாசை கணக்காய்வுக் குழுவினால் வழங்கப்படுகிறது.

## மேற்குறித்த வழிகாட்டல்களின் படி,

- கணக்காய்வுக் குழுவானது, கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று தரம் அல்லாத மூன்று பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன், ஆண்டினுள் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்திய பணிப்பாளர் அதன் தலைமைப் பதவியை வகித்தார்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் திரு. ஆர்.எஸ்.கே. விஜேமான்ன, சுகாதார அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் திருமதி ஆர்.எம்.எஸ்.வசந்த ஆகியோர் அவதானிப்பாளர்களாக பங்குபற்றினர்.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் அவை கூட்டுநராகப் பணியாற்றினார்.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவர், கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

**நிதியாண்டினுள், கணக்காய்வுக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடியது. 05 கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள் நடைபெற்றன.**

**2022 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவினால்**

- குறித்த பிரச்சினைகளின் இயல்பு, அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களின் பதிற்குறிப்புகள், குறிப்பாக எடுத்துக்காட்டப்பட்ட குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முதலியவற்றை உள்ளடக்கி ஆண்டினுள் வெளியிடப்பட்ட சில உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- நிதி, பெறுகை, இருப்புக்கள், நிலையான சொத்துக்கள் உள்ளிட்ட துறைகளில் சில உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் போதிய தன்மையை மீளாய்வு செய்து தகுந்த சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன.

- குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் உரிய திணைக்களத் தலைவர்களினால் எடுக்கப்பட்ட தொடராய்வு நடவடிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்ட மூலப்பொருள்கள் மற்றும் முடிவுப்பொருள்கள் ஆகிய துறைகளில் தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ERP) முறைமை மூலம் உருவாக்கப்பட்ட தகவல்களின் சரியான தன்மை மீது கவனம் செலுத்தப்பட்டது

- 2019,2020 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தீர்க்கப்படாத பிரச்சினைகளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட தொடராய்வு நடவடிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- 2020 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தின் 13 (7) (அ) (முகாமைத்துவ நிருபம்) என்ற அறிக்கையை மீளாய்வு செய்து பிரச்சினைகளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திற்காக அபாய் குழுவொன்றை (அகு) நியமித்தல் குறித்தும் வருடாந்த செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டத்தை (வசெமீகூ) நடாத்துதல் குறித்தும் பரிசீலித்து அது சம்பந்தமான சிபார்சுகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திற்காக கணக்காய்வுக் குழு உரிமைப்பத்திரமொன்றின் தேவை குறித்து கவனம் செலுத்தி அது சம்பந்தமான சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- 2021 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து அது சம்பந்தமான சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன.

குழுவின் விசாரணை நியதிகள் (குவிநி) மூலம் அனைத்து அளவு சார்ந்த அம்சங்களின் விடயங்கள் உள்ளடங்கும் என்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும்.

## கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| எஸ்.ஏ.சி.குலதிலக | - தலைவர் | -பணிப்பாளர் - அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் / பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் (2022.03.22 ஆம் திகதி வரை) |
| ஏ.ஆர்.விக்ரமசிங்க | - தலைவர் | -பணிப்பாளர் - அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் / பணிப்பாளர் (பதில்), நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் (2022.04.29 ஆம் திகதியிலிருந்து) |
| வி.ஜி.சி.விக்ரமரத்ன | - உறுப்பினர் | - பணிப்பாளர் - அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் |
| யூ.எஸ்.கே.தெனவத்த | - உறுப்பினர் | - பணிப்பாளர் - அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் / மேலதிக செயலாளர் (நிருவாகம்) – மருந்தாக்கல், வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலகு – சுகாதார அமைச்சு. |

**ஏ.ஆர்.விக்ரமசிங்க**
**தலைவர் - கணக்காய்வுக் குழு**
**22.02.2023**

# பெருநிறுவன ஆளுகை அறிக்கை

பெருநிறுவன ஆளுகை என்பது பங்குதாரர்களின் (முதலீட்டாளர்கள், பணியாளர்கள், விநியோகத்தர்கள், நுகர்வோர், அரசு மற்றும் பொதுமக்கள்) சிறந்த வெளிப்படைத்தன்மை, சிறந்த மற்றும் சரியான நேரத்தில் நிதி அறிக்கையை உறுதி செய்யும் வகையில் நிர்வாகத்தால் இயக்கப்படும் மற்றும் கட்டுப்படுத்தப்படும் அமைப்பாகும்.

நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு பணிப்பாளர்சபை பொறுப்பாகும்.

## பணிப்பாளர்கள்

முகாமைத்துவம், மருந்தியல், மருத்துவம், சந்தைப்படுத்தல், நிதி மற்றும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த தொழில்நிபுணர்களையும் மற்றும் அனுபவம் வாய்ந்த நபர்களை பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபை, ஒரு நிறைவேற்றுத்தர பணிப்பாளராக தலைவரையும், நான்கு நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களையும் உள்ளடக்கியது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலோ அல்லது கௌரவ அமைச்சரினால் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாத நிலையிலோ தவிர, பணிப்பாளர் சபையானது மாதாந்த இடைவெளிகளுடன் கூட்டப்படுகிறது கூடுதலாக சிறப்புக் கூட்டங்களும் தேவைக்கேற்ப ஏற்பாடு செய்யப்படுகின்றன

இந்த மதிப்பாய்வின் போது, எட்டு பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடைபெற்றன.

## முகாமைத்துவ குழு

பெருநிறுவன முகாமைத்துவ குழு கூட்டுத்தாபன தலைவர் தலைமையில் உள்ளது. இந்தக் குழுவில் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் உள்ளனர்

முகாமைத்துவ குழு, கூட்டுத்தானத்தின் வழக்கமான செயற்பாடுகளில் முடிவுகளை எடுக்கிறது, கொள்கை தீர்மானம் மற்றும் மூலோபாய நோக்கங்களை செயற்படுத்துகிறது, அத்துடன் கொள்கை தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர் சபைக்கு தேவையான பரிந்துரைகளையும் செய்கிறது. முகாமைத்துவ குழு மாத இடைவெளிகளில் கூடுகிறது.

## கணக்காய்வு குழு

'நல்ல நிர்வாகத்திற்கான பொது நிறுவன வழிகாட்டுதல்' மற்றும் பொது நிதி சுற்றறிக்கைகளின் படி கணக்காய்வு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன் இது கூட்டுத்தாபனத்தின் மூன்று நிர்வாகமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. நிதி அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபையின் தலைவராக உள்ளார்.

கூட்டுத்தாபனத்தின் செயல்பாடுகளை கணக்காய்வு குழு சுயாதீனமாக ஆய்வு செய்து மதிப்பீடு செய்கிறது. "உள் கணக்காய்வு திட்டத்தின்" படி மேற்கொள்ளப்படும் உள் கணக்காய்வு செயல்பாடு, கணக்காய்வு குழுவால் அங்கீகரிக்கப்படுவதுடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவிப்பும் செய்யப்படுகிறது.

இந்த மதிப்பாய்வு காலத்தின் போது, ஐந்து கணக்காய்வு குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. கணக்காய்வு குழுவின் அறிக்கை பக்கம் 20 இல் உள்ளது.

## முதலீட்டாளரின் உறவு மற்றும் பொது பொறுப்புக்கூறல்

பொது நிறுவனங்கள் பொதுமக்களின் சார்பாக அரசாங்கத்தால் நிறுவப்பட்டு, உரிமையாக்கப்பட்டு இயக்கப்படுகின்றன.

எனவே கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையும், முகாமையாளர்களும் நிறுவனத்தின் முகாமை தொடர்பில் சுகாதார அமைச்சுக்கும் நிதியமைச்சின் பொதுத்திறைசேரிக்கும் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

வருடாந்த அறிக்கை, வருடாந்த கணக்குகள், வருடாந்த பாதீடுகள், காலாண்டு செயல்திறன் அறிக்கைகள் மேற்கண்ட பொறுப்பை நிறைவேற்றும் வகையில் அதே அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

ஜனநாயக உலகம் முழுவதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம், பொது நிதிக்கான இறுதி அதிகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் செயல்திறன், நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிசீலனைக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒரு பொது நிறுவனமாக இருப்பதால், நாடாளுமன்றின் "பொது நிறுவனங்களுக்கான குழு" (COPE) விற்கும் கூட்டுத்தாபனம் பொறுப்பு கூறுகின்றது

## ஊதியக் கொள்கை

பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் துறையின் பரிந்துரைகளின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் ஊதியக் கொள்கை அமைக்கப்பட்டுள்ளது.

பொது திறைசேரியின் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தொடர்பாக பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க பணிப்பாளரின் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தீர்மானிக்கப்பட்டு செலுத்தப்படுகின்றன.

பொது திறைசேரியின் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பொது நிர்வாக சம்பள விகிதங்களின் அடிப்படையில், நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சம்பள விகிதங்களில் ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படுகிறது. வெகுமதிகளை நேரடியாக செயல்திறனுடன் இணைக்க செயல்திறன் ஊக்குவிப்புத் திட்டம் உள்ளது.

## உள் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தினால் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பரிவர்த்தனைகளும் முறையாக அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்டவை என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்கட்டுப்பாட்டு முறையை கூட்டுத்தாபனம் பராமரிப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உள்ளது.

செயல்பாட்டு நிறுவன அமைப்பு செயல்பாட்டில் உள்ளது. துறைகள் உற்பத்தி, தரக் கட்டுப்பாடு, பராமரிப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் உருவாக்கம் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையின் தலைவர்களும் நேரடியாக கூட்டுத்தாபனத்தின் தலைமை இயக்க அதிகாரியான பொது முகாமையாளரிடம் அறிக்கை செய்கிறார்கள்.

பொது முகாமையாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்கிறார்.

உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு, உள்ளக கணக்காய்வு செயல்பாட்டின் மூலம் அதிகரிக்கப்படுகிறது. உள்ளக கணக்காய்வாளர். நேரடியாக கூட்டுத்தாபனம் மற்றும் கணக்காய்வு குழுவின் தலைவருக்கு அறிக்கை அளிப்பார், இதன் மூலம் உள் கணக்காய்வாளரின் சுதந்திரத்தை வலுப்படுத்துகிறார்.

பரிவர்த்தனைகளின் வெளிப்படைத்தன்மையைப் பராமரிக்கவும், அதன் மூலம் ஆர்வமுள்ள தரப்பினருக்கு சம வாய்ப்புகளை வழங்கவும், தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் கூட்டுத்தாபனத்தால் பின்பற்றப்படுகின்றன.

மூலதன பாதீட்டினை உள்ளடக்கிய வருடாந்த பாதீடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சுகாதாரம் மற்றும் நிதி அமைச்சுக்களுக்கு அனுப்பப்படுகிறது

# பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று

நிதியியல் கூற்றுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள், கணக்காய்வாளர்களின் பொறுப்புகளிலிருந்து வேறுபடுகின்றன. அவை பற்றிய விபரம் 63-73 ஆம் பக்கங்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், ஓர் அரச கூட்டுத்தாபனமானது வருமானமும் செலவினங்களும், சொத்துகளும், பொறுப்புகளும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஏனைய எல்லா கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்குகளைப் பேணுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அத்தகைய வடிவில் அத்தகைய விபரங்களைக் கொண்ட வருடாந்தக் கூற்றையும், கணக்குகளையும் ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் தயாரித்தல் வேண்டும்.

அரசாங்கத்தினதும் பங்கீட்டாளர்களினதும் சார்பாகத் தொழில் முயற்சியொன்றை நடத்தும் நியதிச்சட்டப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உண்டு. நியாயமான அளவு செம்மையாக கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையைக் காட்டுவதற்கும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கும் 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்குவதற்கும், போதியளவு கணக்குப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் பொறுப்புமிக்கவர்களாவதுடன் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே அடிப்படையைப் பணிப்பாளர்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு, உள்ளக சரிபார்த்தலும், நிதியியல் மீளாய்வுகளும், மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்களைக் கண்டறிதல் என்பவை உள்ளிட்ட தகுந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் சமர்ப்பிக்கப்படுவதில் கவனம் செலுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் எல்லா நிதியியல் பதிவுகள், அவை தொடர்பான தரவுகள் ஆகியவற்றுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் யாவும் கணக்காய்வாளர் நாயகத்தினால் பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அபிப்பிராயம் இவ்வறிக்கையின் 63-73 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**டாக்டர். பி.பி.ஜி.பி.யு.இந்திரவன்ச**
**தலைவர்**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**

# அபாய முகாமைத்துவ அறிக்கை

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமாகிய நாம், எமது நிறுவனத்தின் குறுகிய கால, நீண்ட கால ஆகிய இரு காலங்களிலும் பேண்தகுநிலையைக் காப்பதற்கு அபாய முகாமைத்துவத்துடன் இணைந்த பெறுமானத்தை உணர்ந்துள்ளோம். அபாய முகாமைத்துவம், எமது கூட்டிணை மூலோபாய மற்றும் தொழில்முயற்சி மாதிரியுருவின் ஓர் இன்றியமையாத கூறாகும். காலத்துடன் பெறுமானமொன்றைச் சேர்ப்பதற்கு எமக்குள்ள ஆற்றலின் மீது அது நேரடியாக தாக்கம் செலுத்துவதே அதற்குரிய காரணமாகும்.

**அபாய முகாமைத்துவத்தின் நோக்கங்களாவன:**

- நீடுறுதியான கூட்டுத்தாபனத்தின் இருப்பை உத்தரவாதப்படுத்தல்.
- சூழல் மற்றும் சந்தை நிலைமைகளிலிருந்து கூட்டுத்தாபனத்தைப் பாதுகாத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களையும் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களையும் பொதுமக்களையும் பாதுகாத்தல்.
- வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டுக்கு உதவுதல்.

திரவத்தன்மை அபாயம், பெறுகை அபாயம், உற்பத்தி அபாயம், சந்தை அபாயம், அந்நியச் செலாவணி வீத அபாயம, சமூக பொருளாதார அபாயம், மனித வள அபாயம அடங்கலான பல்வேறு இடர்களை முகாமை செய்வற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபத்தின் முகாமைத்துவத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

### திரவத்தன்மை அபாயம

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரச மருத்துவ வழங்கல்கள் பிரிவுக்கு 100% கடன் நிபந்தனையின் அடிப்படையில் மருந்து வகைகளை விநியோகிக்கின்றது.

மருத்துவ வழங்கல்கள் பிரிவினால் நீண்ட காலமாக செலுத்தித் தீர்க்கப்படாதுள்ள விலைப்பட்டியல்கள் மூலம் திரவத்தன்மை அபாயம ஏற்படலாம். ஆகையால், திரவத்தன்மை அபாயச்சை தவிர்த்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து, பொதுத் திறைசேரியின் தலையீட்டுடன் குறித்த தொகைகளை ஈடுசெய்துகொள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### பெறுகை அபாயம

புதிய மூலப்பொருள்களின் பெறுகை முக்கியமாக அரசாங்க கேள்விப்பத்திர நடபடிமுறைகளைத் தழுவியதாகவே மேற்கொள்ளப்படுவதுடன், மூலப்பொருள்களில் 80% க்குக் கூடுதலான அளவு இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகையால், உற்பத்திச் செயன்முறையின் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய மூலப்பொருள்களை தொடர்ச்சியாக வழங்கும் அபாயம நிலைமையொன்று காணப்படுகின்றது.

இந்த அபாய தவிர்த்துக்கொள்வதற்கு மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள ஆற்றலை முகாமைத்துவம் நெருக்கமாக அவதானித்தது. உலகளவிலான கேள்விப்பத்திர நடபடிமுறைகளின் ஊடாக வழங்குநர்களின் அடிப்படையை விரிவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### உற்பத்தி அபாயம

சந்தைக்கு விநியோகிக்கப்படும் உற்பத்திகள் யாவும் எமது உள்ளான விவரக்குறிப்பீடுகள் போன்றே பிரித்தானிய மருந்துகளின் விவரக்குறிப்பீடுகளுக்கும் (BP) ஐக்கிய அமெரிக்க விவரக்குறிப்பீடுகளுக்கும் (USP) ஏற்புடைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்றன.

சிறந்த உற்பத்தி நடைமுறைகள் தொடர்ந்தும் மேற்பார்வை செய்யப்படுவதோடு, மருந்து உற்பத்திகள் உரிய தரநியமங்களுக்கு அமைவானவையா என்பதை உறுதிசெய்வதற்காக குறித்த உற்பத்திகளுக்குரிய ஏனைய முறைமைகளும் நடபடிமுறைகளும் தொடர்ந்தும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

### சந்தை அபாயம

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்பட்ட சந்தைப் போட்டிநிலை அதிகரிப்பதற்கான இடரொன்று உள்ளது. எமது உற்பத்திகளுக்கு பிரதான போட்டியாளர்களாக மருந்துகளை இறக்குமதி செய்வதோடு சம்பந்தப்பட்ட மருந்துக் கம்பனிகளை அடையாளம் காட்டலாம். அபாயம் குறித்து உணர்ந்து, மொத்த கிரயத்தைக் குறைக்கும் நோக்குடன் செயல் விளைதிறனை அதிகரிப்பதன் மீது நாம் எமது கவனத்தை தொடர்ந்தும் செலுத்துகின்றோம்.

### செலாவணி விகித அபாயம்

செலாவணி விகிதங்களின் ஏற்றவிறக்கம், உற்பத்திகளின் விலையிடலின் மீது நேரடியாகவே தாக்கம் செலுத்தக்கூடியதாகும். 2022 ஆம் ஆண்டில் செலாவணி விகிதங்களின் அதிகரிப்பு உற்பத்திகளின் விலையிடல் மீது பெருமளவு தாக்கம் செலுத்தியது. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், அதன்போது ஏற்பட்ட சில பலவீனங்களைத் தவிர்ப்பதற்கு விலையிடல் குழுக் கூட்டமொன்றை நடாத்தியது.

### சமூக பொருளாதார அபாயம

தேசிய சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் முறைமைக்கும் பொதுமக்களுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் பயனுறுதிவாய்ந்த மருந்துகளை வழங்குவது, ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலையாய பொறுப்பாகும்.

### மனி வள அபாயம

நிறுவனங்களின் பயிற்றப்பட்ட ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயரும் ஆபத்தொன்று காணப்படுவதால், அதற்குரிய சம்பளமற்ற லீவு நடபடிமுறையை மாற்றியமைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

# பேண்தகு அபிவிருத்தி பற்றிய இலக்குகள்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், பொறுப்பு வாய்ந்த ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தின் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால மூலோபாயங்களில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDGs) உள்ளடக்குவதன் மூலம் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு பங்காற்றுகின்றது.

## 1 வறுமைநிலையை ஒழித்துக் கட்டல்

கூட்டுத்தாபனம், தமது 321 ஊழியர்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதற்காக அவர்களின் ஊழியக் கிரயமாக 375 மில்லியன் ரூபா தொகையைச் செலுத்தியுள்ளது. மேலும், அந்த ஊழியர்களினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடன் வழங்கல் திட்டங்களையும் மருத்துவ வசதிகள் முதலான பல்வேறு நலனோம்புகைத் திட்டங்களையும் அவர்களுக்கு வழங்குகின்றது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் பொது மக்களுக்கு பொருளாதார ரீதியாக நிவாரணமளிக்கும் நோக்குடன் உயர் தரம் வாய்ந்த மருந்து வகைகளை அவர்களால் தாங்கிக்கொள்ளக்கூடிய விலைக்கு வழங்குகின்றது.

## 3 சிறந்த ஆரோக்கிய நிலையும் நலமும்

மருந்து வகைகளை உற்பத்திசெய்யும் ஒரேயொரு அரச நிறுவனமான அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், மருந்து உற்பத்திச் செயன்முறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரநியமங்களை அனுசரிக்கின்றது.

அரச மருத்துவமனைகளில் மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்படாதவாறு பல்வேறு மருந்து வகைகள் (அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித் தொடர்) தொடர்ச்சியாக அரச மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படுவதுடன், விநியோக சேவை மார்க்கங்களின் ஊடாக தாங்கிக்கொள்ளக்கூடிய விலைக்கு தனியார்துறை சந்தைக்கும் அத்தகைய மருந்து வகைகள் வழங்கப்படுகின்றன.

சுகாதாரத்தையும் நலத்தையும் முன்னேற்றும் நோக்கில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் உள்ளடக்குகின்ற மருத்துவ உதவித் திட்டம், பணிக்கொடைக் கொடுப்பனவு, பிரசவ விடுமுறை வழங்குதல் முதலியவற்றின் மூலம் தமது ஊழியர்களுக்கு மருத்துவ நன்மைகள் அடங்கலான நன்மைகளை கூட்டுத்தாபனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## 5 பால்நிலை சமத்துவம்

தமது ஊழியர்கள் அனைவருக்கும் கூட்டுத்தாபனம் சமவாய்ப்பு அளித்துள்ளதோடு, பால்நிலை அடிப்படையில் எந்தவொரு பாரபட்சமும் காட்டப்படுவதில்லை. ஊழியர்கள் அனைவருக்கும் துறையில் எந்தவொரு பாரபட்சமும் இன்றி அவர்களுக்கு சமமான நன்மைகளை வழங்கும் ஒரு கொள்கை பின்பற்றப்படுவதுடன், அனைத்து நியதிச்சட்ட மற்றும் ஏனைய தேவைகளுக்கும் இணங்க ஒரே தொழில் வகுதிகளுக்கு சமமான நன்மை அளவுத்திட்டங்களுக்கு (1:1) தகுதிபெறும் விதத்தில் ஆளெவருக்கும் பால்நிலை வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்காமல் செயலாற்றப்படுகின்றது.

## 8 நேரடியாக பணியிலீடுபடுதலும் பொருளாதார வளர்ச்சியும்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு வீத வரிகள், அறவீடுகள், தீர்வைகள் என்ற வடிவில் கூட்டுத்தாபனத்தினால் 800 மில்லியன் ரூபா தொகை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான ஒரே அரச மருந்து உற்பத்தியாளர் என்ற வகையில் நாட்டினுள் மருந்துப்பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்படாதவாறு பல்வேறு மருந்து வகைகளை ஆண்டுபூராவும் அரச மருத்துவமனைகளுக்கும் தனியார்துறைக்கும் தொடர்ச்சியாக வழங்குவதில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

மேலும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் 2022 ஆம் ஆண்டில் அதன் மொத்தக் கிரயத்தில் 35% க்குக் கூடுதலான பங்கு பொருளாதார பெறுமானமொன்றையும் டொலர் சேமிப்பொன்றையும் நாட்டுக்கு சேர்த்துக் கொடுத்தது.

## 9 கைத்தொழில் புத்தாக்கமும் உட்கட்டமைப்பு வசதிகளும

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், புதிய அத்தியாவசிய மருந்துகளான சிடெக்லிப்டின் (50 மில்லி கிராம்) குளிகைகள், ரொசுவெஸ்டடின் (10 மில்லி கிராம்) குளிகைகள ஆகியவற்றை 2022 ஆம் ஆண்டில் சகாய விலைக்கு வழங்கும் நோக்குடன், தனியார் சந்தைக்கும் அரச மருத்துவமனைகளுக்கும் வழங்குவதற்காக அதற்குரிய விஞ்ஞான ஆராய்ச்சிகளை முன்னேற்றியுள்ளது. புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் வாய்வழியாக எடுக்கக்கூடிய திண்ம வில்லை (OSD) மருந்துகளையும், உடற்குறை நிவர்த்தி உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் திட்டம் வகுத்துள்ளது.

## 10 சமத்துவமின்மைகளைக் குறைத்தல்

பயிற்சியளித்தல், ஆட்சேர்ப்புசெய்தல், வேலை ஒப்படைப்புகள், பதவி உயர்வு வழங்கல்கள் போன்ற நாளாந்த நடவடிக்கைகளின் போது அனைவரையும் நியாயமான முறையில் கவனிக்கும் பொருட்டு உதவுவதற்கான தெளிவான சமத்துவமான கொள்கைகளைப் பேணுவதன் ஊடாக வாய்ப்புக் கிட்டும்.

## 12 பொறுப்புடனான நுகர்வும் உற்பத்தியும்

உடன்பட்ட சர்வதேச செயல் வரைகளுக்கு இணங்க, கழிவுப்பொருள்களை வெளியேற்றுவதற்கான சுற்றாடல் நட்புறவான முகாமைத்துவ முறைமையொன்று எம்மால் முன்னெடுக்கப்படுகிறது. அதன் மூலம் மனிதர்களின் சுகாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படக்கூடிய பாதக தாக்கங்களைக் குறைப்பதற்காக வளிக்கும், நீருக்கும், மண்ணுக்கும் அவற்றை விடுவிக்காமல் இருக்க நாம் உறுதியளிக்கின்றோம். சர்வதேச அங்கீகாரம் பெற்ற முறைமைகளையும் அதற்கு உடன்பாடான சட்டதிட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அனுசரித்தே மருந்து உற்பத்திக் கழிவுப்பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன.

## 13 காலநிலை நடவடிக்கைகள

காலநிலை சார்ந்த தொல்லைகளும் அவை சார்ந்ததாக இடம்பெறும் இயற்கை அனர்த்தங்களும் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கும் தடுப்பதற்குமான உள்ளக நடபடிமுறைகளும் நடைமுறைகளும் எம்மால் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அவற்றைச் செயற்படுத்துவதற்கு பணியாட்குழுவுக்கு அவசியமான பயிற்சிகளையும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் நாம் ஏற்பாடு செய்து கொடுக்கின்றோம்.

# கூட்டிணை சமூகப் பொறுப்புக்கள்

சமூகத்தின் சுகாதார, நலனோம்புகை மற்றும் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அதன் பணியாட்குழுவின் பங்கேற்புடன் புற்றுநோய் வைத்தியசாலைக்கு இரத்த தானம செய்தல், உணவு பானங்களையும் அத்தியாவசிய மருந்து வகைகளையும் வழங்குதல், அதன் சத்திர சிகிச்சைக் கூடத்தைப் புதுப்பித்தல் போன்ற சில செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.



# அ.ம.கூ. இனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் - 2022

## இன ரீதியான உற்பத்தி அளவு - குளிகைகள் / கூட்டுக்குளிகைகள் மில்லியன் அலகுகளில்

| உற்பத்திகள் | அளவு மில்லியன் |
|---|---|
| அமொக்சிசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி. | 80.85 |
| அமொக்சிசிலின் கூட்டுக்குளிகைகள் BP 500 மி.கி. | 43.58 |
| அமொக்சிசிலின் குளிகைகள் USP 125 மி.கி. | 12.59 |
| அஸ்கோர்பிக் அசிட் குளிகைகள் BP 100 மி.கி. | 144.45 |
| அஸ்பிரின் குளிகைகள் BP 75 மி.கி. | 1.50 |
| அரெனொலொல் குளிகைகள் BP 50 மி.கி. | 10.00 |
| அரோவஸ்ரடின் குளிகைகள் IP 10 மி.கி. | 191.01 |
| அரோவஸ்ரடின் குளிகைகள் IP 20 மி.கி. | 52.80 |
| பென்செக்சோல் குளிகை BP 2 மி.கி. | 40.00 |
| பிசொபுரொலோல் குளிகைகள் BP 5 மி.கி. | 4.50 |
| காபமெசபைன் குளிகைகள் BP 200 மி.கி. | 31.75 |
| சிற்ரசின் குளிகைகள் BP 10 மி.கி. | 29.90 |
| சிப்ரோ.ஃ.பிலொக்சசின் குளிகைகள் USP 250 மி.கி. | 3.00 |
| சிப்ரோ.ஃ.பிலொக்சசின் குளிகைகள் USP 500 மி.கி. | 4.00 |
| கிளரித்ரோமைசின் குளிகைகள் 250 மி.கி. | 9.60 |
| குளபிட்டோகிரெல் குளிகைகள் USP 75 மி.கி. | 2.99 |
| குளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி. | 20.28 |
| குளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 500 மி.கி. | 19.25 |
| கோ-ட்ரிமொக்சசோல் குளிகைகள் BP (வயது வந்தோர்) | 8.25 |
| டைக்ளொ.ஃ.பெனெக் சோடியம் குளிகை USP 50 மி.கி. | 35.10 |
| டில்ரியாசம் HCl குளிகைகள் USP 30 மி.கி. | 48.00 |
| டில்ரியாசம் HCl குளிகைகள் USP 60 மி.கி. | 10.50 |
| டொம்பெரிடோன் குளிகைகள் BP 10 மி.கி. | 58.10 |
| எனலப்பிரில் மெலியேற் குளிகைகள் BP 5 மி.கி. | 55.21 |
| பமோரிடின் குளிகைகள் BP 20 மி.கி. | 102.63 |
| புளுகுளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி. | 8.40 |
| புளுகுளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 500 மி.கி. | 9.28 |
| போலிக் அசிட் குளிகைகள் BP 1 மி.கி. | 64.00 |

| உற்பத்திகள் | அளவு மில்லியன் |
|---|---|
| புருஸிமைட் குளிகைகள் BP 40 மி.கி. | 73.50 |
| காபாபென்ரீன் கூட்டுக்குளிகைகள் USP 300 மி.கி. | 7.72 |
| க்ளிக்ளஸைட் குளிகைகள் BP 40 மி.கி. | 174.00 |
| கிளிக்ளஸைட் குளிகைகள் BP 80 மி.கி. | 297.00 |
| இன்டோமெதசின் கூட்டுக்குளிகைகள் BP 25 மி.கி. | 5.00 |
| லிவொதைரொக்சின் குளிகைகள் IP 50 மை.கி. | 54.71 |
| லொராரிடின் குளிகைகள் USP 10 மி.கி. | 3.75 |
| லொசார்டன் பொட்டாசியம் குளிகைகள் BP 25மி.கி. | 1.50 |
| லொசார்டன் பொட்டாசியம் குளிகைகள் BP 50 மி.கி. | 309.40 |
| மெபென்டசோல் குளிகைகள் USP 500 மி.கி. | 0.32 |
| மெபெனமிக் அசிட் குளிகைகள் BP 500 மி.கி. | 0.41 |
| மெற்.ஃ.போர்மின் குளிகைகள் BP 500 மி.கி | 72.84 |
| மெற்ரோனிடசோல் குளிகைகள் BP 200 மிகி | 14.40 |
| ஓமிபிரசோல் கூட்டுக்குளிகைகள் IP 20 மி.கி. | 201.80 |
| பரசிடமோல் குளிகைகள் BP 500 மி.கி. | 523.05 |
| பெனொக்சிமெதைல் பெனிசிலின் குளிகைகள் BP 250 மி.கி. | 12.80 |
| பிரெட்னிசொலோன் குளிகைகள் BP 1 மி.கி. | 50.45 |
| பிரெட்னிசொலோன் குளிகை BP 5 மிகி | 106.40 |
| புறப்றனலோல் குளிகை BP 40 மிகி | 13.95 |
| றொசுவாஸ்ரரின் குளிகைகள் IP 10 மி.கி. | 1.07 |
| சல்பியூடமோல் குளிகைகள் BP 2 மி.கி. | 117.60 |
| சல்பியூடமோல் குளிகைகள் BP 4 மி.கி. | 6.00 |
| ஸ்பிரனோலக்டோன் குளிகைகள் USP 25 மி.கி. | 36.00 |
| தியோபிலின் E/R குளிகைகள் USP 125 மி.கி. | 13.65 |
| டிராமடோல் கூட்டுக்குளிகைகள் IP 50 மி.கி. | 1.20 |
| ட்றை/ப்ளோபெரசின் HCl குளிகைகள் BP 5 மி.கி. | 13.50 |
| வெரபமில் குளிகைகள் BP 40 மி.கி. | 24.20 |
| விட்டமின் B கொம்பிளெக்ஸ் குளிகைகள் CHF | 64.40 |

## வெளியிடப்படவுள்ள உற்பத்திகள் - 2023

அம்லோடிபின் பெசெலேற் குளிகைகள் USP 5 மி.கி.

போலிக் அசிட் குளிகைகள் BP 400 மை.கி.

இபுபுருபன் குளிகைகள் BP 200 மி.கி.

மெற்போமின் குளிகைகள் BP 850 மி.கி.

மெதயில்பிரட்னிசொலொன் குளிகைகள் BP 4 மி.கி

லெவெரிறாசெற்றம் குளிகைகள் USP 250 மி.கி.

# கூட்டுமுயற்சி உற்பத்தி பொருட்கள்

1 Acetaminophen Suppositories USP 125 mg
2 Acetaminophen Suppositories USP 250 mg
3 Acetaminophen Suppositories USP 500 mg
4 Acetazolamide Tablets BP 250 mg
5 Aciclovir Tablets BP 200 mg
6 Aciclovir Tablets BP 800 mg
7 Alfacalcidol Softgelatin Capsules 0.25 mcg
8 Amiodarone Tablets BP 100 mg
9 Amisulpride Tablets BP 200 mg
10 Amlodipine Besylate Tablets USP 2.5 mg
11 Aripiprazole Tablets USP 10 mg
12 Atorvastatin Tablets IP 10 mg
13 Atorvastatin Tablets IP 20 mg
14 Atorvastatin Tablets 40 mg
15 Baclofen Tablets 5 mg
16 Baclofen Tablets BP 10 mg
17 Betamethasone Valerate Cream USP 0.1%, 15 g
18 Betamethasone Valerate Cream USP 0.1%, 5 g
19 Betamethasone Valerate Oinment USP 0.1%, 15g
20 Betamethasone Valerate Oinment USP 0.1%,5g
21 Bisacodyl Suppositories USP 10 mg
22 Bisacodyl Tablets BP 10 mg
23 Bisoprolol Fumarate Tablets USP 2.5 mg
24 Bosentan Tablets 125 mg
25 Bosentan Tablets 62.5 mg
26 Cabergoline Tablets USP 0.5 mg
27 Calciferol Tablets 10000IU
28 Calcitriol Softgel Capsules 0.25 mcg
29 Calcium Carbonate Tablets 1250 mg
30 Calcium Carbornate Chewable Tablets BP 500 mg
31 Calcium Lactate Tablets BP 300 mg
32 Captopril Tablets 12.5 mg
33 Carvedilol Tablets USP 3.125 mg
34 Carvedilol Tablets USP 6.25 mg
35 Carvedilol Tablets USP 12.50 mg
36 Cetirizine Oral Solution BP 5 mg /5 ml
37 Chlorpheniramine Oral Solution USP 2 mg /5 ml
38 Chlorpromazine Tablets BP 50 mg
39 Ciprofloxacin Intravenous Infusion BP 0.2% w/v, 100ml
40 Clindamycin Capsules BP 150 mg
41 Clindamycin Capsules BP 300 mg
42 Clomipramine Tablets 50 mg
43 Clopidogrel Tablets 75 mg
44 Clotrimazole Cream 1% 15 g
45 Clozapine Tablets USP 100 mg
46 Colecalciferol Tablets BP 400 IU
47 Compound Sodium Lactate Intravenous Infusion BP 500 ml
48 Cotton Crape Bandage, 10cm - 6m Roll
49 Cotton Crape Bandage, 5cm - 3m Roll
50 Cotton Crape Bandage, 7.5cm - 4.5m Roll
51 Dapsone Tablets BP 25 mg
52 Dapsone Tablets BP 50 mg
53 Deferasirox Tablets 100 mg
54 Deferasirox Tablets 400 mg
55 Dextran 40 Intravenous Infusion BP 10% w/v,500 ml
56 Diclofenac Sodium Suppositories 100 mg
57 Diclofenac Sodium Suppositories 12.5 mg
58 Diclofenac Sodium Suppositories 25 mg
59 Domperidone Suppositories 10 mg
60 Domperidone Suppositories 30 mg
61 Domperidone Suppositories 60 mg
62 Donepezil Hydrochloride Tablets USP 5 mg
63 Doxepin Capsules BP 50 mg
64 Eco Cleanse (1-500 Dialution) General Purpose Disinfectant Cleaner (Teepol)
65 Ferrous Fumarate + Folic Acid Tablets 182.4 mg
66 Ferrous Fumarate + Folic Acid Tablets 91.2 mg
67 Ferrous Sulphate Tablets 200 mg
68 Fluphenazine HCl USP 5 mg
69 Gabapentin Capsules USP 300 mg
70 Gabapentin Capsules USP 300 mg - Blister
71 Gastro resistant Aspirin Tablets BP 75 mg
72 Gastro Resistant Diclofenac Tablets BP 25 mg
73 Gastro-resistant Sodium Valproate Tablets BP100 mg
74 Gastro-resistant Sodium Valproate Tablets BP 200 mg
75 Gliclazide Modified Release Tablets 30 mg (Blister)
76 Glucose Intravenous Infusion BP 10% w/v,500 ml
77 Glucose Intravenous Infusion BP 25% w/v,25 ml
78 Glucose Intravenous Infusion BP 5% w/v,500 ml
79 Glucose Intravenous Infusion BP 50% w/v,50 ml
80 Haemodialysis Solution 5 l
81 Haemodialysis Solution 10 l
82 Hydralazine Tablets BP 50 mg
83 Hydrocortisone Acetate Cream 1%, 15 g
84 Hydrocortisone Acetate Cream 1%, 5 g
85 Hydrocortisone Ointment 1%, 15 g
86 Hydrocortisone Ointment 1%, 5 g
87 Hydroxychloroquine Sulfate Tablets USP 200 mg
88 Isosorbide Mononitrate Tablets BP 30 mg
89 Labetalol Tablets BP 100 mg
90 Lactulose Solution 120 ml
91 Lamotrigine Tablets USP 25 mg
92 Lamotrigine Tablets USP 50 mg
93 Lamotrigine Tablets USP 100 mg
94 Levamisole Hydrochloride Tablets USP 40 mg
95 Levetiracetam Tablets USP 250 mg
96 Levetiracetam Tablets USP 500 mg
97 Lithium Carbonate Tablets BP 250 mg
98 Losartan Potassium Tablets BP 25 mg

99 Losartan Potassium Tablets BP 50 mg
100 Magnesium Sulfate Injection BP 50% w/v,10 ml
101 Mannitol Intravenous Infusion BP 20% w/v,250 ml
102 Mesalazine Suppositories BP 500 mg
103 Metformin SR Tablets 500 mg
104 Metformin Tablets BP 500mg
105 Methionine Tablets 500 mg
106 Methyldopa Tablets BP 250 mg
107 Metolazone Tablets USP 5 mg
108 Metoprolol Tartrate Tablets USP 50 mg
109 Metronidazole Intravenous Infusion BP 0.5% w/v, 100 ml
110 Miconazole Nitrate Cream 2%, 15 g
111 Mycophenolate Mofetil Tab USP 500 mg
112 Mycophenolate Mofetil Tablets USP 250 mg
113 Nalidixic Acid Tablets 250 mg
114 Nicorandil Tablets BP 10 mg
115 Ofloxacin Intravenous Infusion 0.2% w/v, 100 ml
116 Omeprazole Capsules 20 mg
117 Omeprazole Magnesium Tablets 10 mg
118 Oseltamivir Phosphate Capsules USP 30 mg
119 Oseltamivir Phosphate Capsules USP 45 mg
120 Oxcarbazepine Tablets USP 150 mg
121 Oxcarbazepine Tablets USP 300 mg
122 Paediatric Paracetamol Oral Solution BP 120 mg / 5ml
123 Pancreatin Capsules 150 mg
124 Penicillamine Capsules USP 250 mg
125 Phytomenadione Tablets BP 5 mg
126 Pizotifen Tablets BP 0.5 mg
127 Potassium Chloride 15% Injection 10 ml
128 Povidone Iodine Solution 10%, 500 ml
129 Povidone Iodine Solution 7.5%, 500 ml
130 Prazosin Tablets 1 mg
131 Pregabalin Capsules IP 75 mg
132 Primidone Tablets USP 250 mg
133 Prolong Released Propranolol Capsules BP 160 mg
134 Prolonged Release Diltiazem Tablets BP 90 mg
135 Pyridoxine Tablets BP 10 mg
136 Pyridostigmine Tab BP 60 mg
137 Pyrimethamine Tabs BP 25 mg
138 Quetiapine Extended-Release Tablets USP 200 mg
139 Quetiapine Tablets USP 25 mg
140 Quetiapine Tablets USP 100 mg
141 Risperidone Tablets USP 1 mg
142 Risperidone Tablets USP 2 mg
143 Salbutamol Oral Solution 2 mg / 5 ml
144 Sertraline HCl Tablets USP 50 mg
145 Sildenafil Tablets USP 50 mg
146 Silver Sulphadiazine Cream 1%, 15 gr
147 Silver Sulphadiazine Cream 1%, 500 gr
148 Sitagliptin Tablets USP 50 mg
149 Sitagliptin Tablets USP 100 mg
150 Sodium Bicarbonate Tablets USP 600 mg
151 Sodium Chloride Intravenous Infusion BP 0.9% w/v, 500 ml
152 Sodium Chloride & Glucose Injection BP 0.9% & 5% w/v, 5 ml
153 Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.45% & 10% w/v, 500 ml
154 Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.45% & 5% w/v, 500 ml
155 Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.9% & 10% w/v, 500 ml
156 Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.9% & 5% w/v, 500 ml
157 Sodium Chloride Intra. Infusion BP 3% w/v, 500 ml
158 Sodium Fusidate Tablets 250 mg
159 Solifenacin Succinate Tablets 5 mg
160 Solifenacin Succinate Tablets 10 mg
161 Sotalol hydrochloride tablets USP 80 mg
162 Sterilised Water for Injections BP-10 ml
163 Sulfadiazine Tablets USP 500 mg
164 Sumatriptan Tablets BP 50 mg
165 Tamsulosin Prolonged Release Capsules BP 0.2 mg
166 Tamsulosin Prolonged Release Capsules BP 0.4 mg
167 Theophyline Extended-Release Tablets 125 mg
168 Thiamine Hydrochloride Tablets USP 10 mg
169 Thiamine Hydrochloride Tablets USP 100 mg
170 Tranexamic Acid Capsules 500 mg
171 Trientine Hydrochloride Capsules USP 300 mg
172 Trifluoperazine Tablets BP 5 mg
173 Ursodeoxycholic Acid Tablets BP 150 mg
174 Valganciclovir Tablets 450 mg
175 Venlafaxine Hydrocholoride Extended-Release Capsules USP 37.5 mg
176 Venlafaxine Hydrocholoride Extended-Release Capsules USP 75 mg
177 Verapamil PR Tablets BP 240 mg
178 Vigabatrin Tablets BP 500 mg
179 Vitamin A Capsules
180 Voriconazol Tablets 20 mg -(200 mg)
181 Wafarin Sodium Tablets USP 0.5 mg
182 Wafarin Sodium Tablets USP 1 mg
183 Wafarin Sodium Tablets USP 3 mg
184 Wafarin Sodium Tablets USP 5 mg
185 Zinc Sulfate Tablets USP 10 mg (Dispersible)
186 Zinc Sulfate Tablets USP 20 mg (Dispersible)
187 Vitamin A Capsules
188 Voriconazol Tablets 20 mg -(200 mg)
189 Wafarin Sodium Tablets USP 0.5 mg
190 Wafarin Sodium Tablets USP 1 mg
191 Wafarin Sodium Tablets USP 3 mg
192 Wafarin Sodium Tablets USP 5 mg
193 Zinc Sulfate Tablets USP 10 mg (Dispersible)
194 Zinc Sulfate Tablets USP 20 mg (Dispersible)

# நிதி அறிக்கைகள்



# முழுமையான வருமானக் கூற்று

2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | குறிப்பு | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| வருமானம் | 1 | 16,620,184,659 | 8,538,944,512 |
| விற்பனை செலவுகள் | 2 | (14,559,044,540) | (7,102,322,996) |
| **மொத்த இலாபம்** | | **2,061,140,119** | **1,436,621,516** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 3 | 16,520,019 | 14,370,344 |
| நிர்வாகச் செலவுகள் | 4 | (332,120,885) | (244,271,572) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 5 | (472,762,064) | (109,186,789) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 6 | (19,415,514) | (10,478,114) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **1,253,361,675** | **1,087,055,386** |
| நிதிச்செலவு | 7 | (18,908,009) | (8,520,055) |
| நிதி வருமானம் | 8 | 351,759,383 | 156,792,127 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **1,586,213,049** | **1,235,327,457** |
| வரிச்செலவுகள் | 9 | (620,740,598) | (229,141,993) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **965,472,451** | **1,006,185,464** |

| **முழுமையான வருமானக் கூற்று** | | | |
|---|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம் | | 965,472,451 | 1,006,185,464 |
| (-) அனுபவித்த இலாபம் / நட்டம் | | (32,822,249) | 9,873,540 |
| வருமான வரி மீதான ஆயட்கணக்கர் (இலாபம்) / நட்டம் | 9 (B) (i) | 9,846,675 | (1,777,237) |
| | | **(22,975,574)** | **8,096,303** |
| (-) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீட்டு மிகை | | 797,137,916 | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீட்ட மிகை மீதான வருமான வரி | 9 (B) (i) | (239,141,375) | - |
| **ஆண்டுக்கான ஏனைய முழுமையான வருமானம் நிகர வரி** | | **557,996,541** | - |
| **ஆண்டுக்கான மொத்த முழுமையான வருமானம் நிகர வரி** | | **1,500,493,418** | **1,014,281,767** |

# நிதியியல் நிலைமை பற்றிய கூற்று

2022.12.31இல் உள்ளவாறு

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | குறிப்பு | 31.12.2022 அன்று உள்ளபடி | 31.12.2021 அன்று உள்ளபடி |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 10 | 3,656,401,031 | 2,974,013,880 |
| கட்புலனாகாச் சொத்துகள் | 11 | 6,258,464 | 2,299,428 |
| ஏனைய நடைமுறை அல்லாத சொத்துகள் | 14 | 1,361,876 | 1,331,299 |
| குத்தகை முன்கொடுப்பனவு | 13 | 322,383,586 | 3,184,266 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை - கட்டுமானம் | | 117,009,089 | 82,892,316 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| இருப்புகள் | 15 | 3,018,074,553 | 1,624,026,442 |
| வியாபார மற்றும் ஏனைய வரவேண்டியவை | 16 | 2,431,109,540 | 507,636,481 |
| முற்கொடுப்பனவு | 17 | 61,577,319 | 30,642,190 |
| ஏனைய நிதிச் சொத்துகள் | 18 | 4,398,099,756 | 3,452,508,242 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 19 | 1,436,015 | 1,767,448 |
| | | **9,910,297,183** | **5,616,580,803** |
| **மொத்த சொத்துகள்** | | **14,013,711,229** | **8,680,301,991** |
| **உரிமை முதலும் பொறுப்புகளும்** | | | |
| அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் | | 850,000,000 | 850,000,000 |
| சொல்லப்பட்ட மூலதனம் | 20 | 690,079,000 | 690,079,000 |
| வைத்திருப்பு வருவாய் | | 5,432,569,219 | 4,589,998,196 |
| Revaluation Reserve | 26 | 557,996,541 | - |
| **மொத்த உரிமை முதல்** | | **6,680,644,760** | **5,280,077,196** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| ஊழியர் பயன் பொறுப்புகள் | | 165,380,683 | 110,331,838 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 21 | 651,193,284 | 219,013,634 |
| ஜைக்கா (JICA) கடன் | 22 | 2,416,094,044 | 2,416,094,044 |
| | | **3,232,668,011** | **2,745,439,516** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபாரமும் ஏனைய செலுத்தவேண்டியவையும் | 23 | 3,835,520,591 | 556,216,467 |
| செலுத்த வேண்டியவை | | 264,877,868 | 98,568,811 |
| | | **4,100,398,459** | **654,785,279** |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்புகளும்** | | **14,013,711,229** | **8,680,301,991** |

இந்த நிதிக்கூற்றுக்களின் முழு பகுதி மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் பக்கம் 93 இலிருந்து 100 வரை காணப்படுகிறது. இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்தல பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந் நிதியியல் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையின் பின்வருவோரால் ஒப்பமிடப்பட்டு அவர்களின் அங்கீகாரத்துடன் கணக்காளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது.

தலைவர் : ................................ பணிப்பாளர் :.......................................

பிரதிப் பொது முகாமையாளர் - நிதி : .............................. திகதி : 28.06.2022

# உரிமை முதல் கூற்றில் மாற்றங்கள்

2022 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | கூறப்பட்ட மூலதனம் | இலாபம் மற்றும் நட்டம் | மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2021.01.01இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 3,686,214,826 | - | 4,376,293,826 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | - | 1,006,185,462 | - | 1,006,185,462 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | 8,096,303 | - | 8,096,303 |
| மொத்த முழுமையான வருமானம் | - | 1,014,281,765 | - | 1,014,281,765 |
| திறைசேரிக்கான பங்களிப்பு | - | (100,000,000) | - | (100,000,000) |
| முன்னைய ஆண்டுக்கான சீர்திருத்தங்கள் | - | (10,498,397) | - | (10,498,398) |
| **2021.12.31இல் உள்ளவாறு மீதி** | **690,079,000** | **4,589,998,194** | **-** | **5,280,077,193** |
| | | | | |
| 2022.01.01இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 4,589,998,197 | - | 5,280,077,197 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | - | 965,472,451 | - | 965,472,451 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | (22,975,574) | 557,996,541 | (22,975,574) |
| மொத்த முழுமையான வருமானம் | - | 942,496,877 | 557,996,541 | 942,496,877 |
| திறைசேரிக்கான பங்களிப்பு | - | (100,000,000) | - | (100,000,000) |
| முன்னைய ஆண்டுக்கான சீர்திருத்தங்கள் | - | 74,145 | - | 74,145 |
| **2022.12.31இல் உள்ளவாறு மீதி** | **690,079,000** | **5,432,569,219** | **557,996,541** | **6,122,648,219** |

# காசுப்பாய்ச்சல் கூற்று

2022 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் /(நட்டம்) மற்றும் அசாதாரண இனங்கள் | 1,586,213,049 | 1,235,327,457 |
| முன்னைய ஆண்டுக்கான சீர்திருத்தங்கள் | (7,645,166) | (10,498,397) |
| திருத்தங்கள் : | | |
| அசையாச் சொத்துகளின் தேய்வு | 262,466,303 | 167,292,301 |
| நடைமுறை சேவை செலவினம் | 13,640,020 | 6,447,492 |
| ஊழியர் வட்டிச் செலவு | 12,688,161 | 9,611,983 |
| ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் | 312,417,918 | - |
| கையுதிர்ப்பு இலாபம் / நட்டம் | 374,963 | (6,187,150) |
| சேதமடைந்தவை மற்றும் பயன்படுத்தாதவற்றுக்கான செலவு | 433,204 | 8,891 |
| வட்டி வருமானம் | (347,113,761) | (152,611,692) |
| **செயற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்** | **1,833,474,691** | **1,249,390,885** |
| | | |
| **செயற்படு மூலதன இனங்களில் மாற்றம்** | | |
| இருப்புகளில் (அதிகரிப்பு) / குறைவு | (1,394,048,111) | (285,562,367) |
| கடன் பெறுனர் மற்றும் பெறவேண்டியவற்றில் (அதிகரிப்பு) / குறைவு | (2,235,890,976) | (277,002,797) |
| வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) / குறைவு | (30,935,130) | (18,640,343) |
| பொறுப்புகளில் அதிகரிப்பு / (குறைவு) | 3,279,304,123 | (120,816,853) |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட காசு** | **1,451,904,597** | **547,368,525** |
| | | |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (4,101,585) | (2,653,905) |
| செலுத்தப்பட்ட வரி வருமானம் | (251,546,593) | (166,827,569) |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு** | **1,196,256,418** | **377,887,051** |
| | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறுகிய கால முதலீடு (குறிப்பு அ) | (745,071,893) | (405,514,091) |
| அசையாச் சொத்துகள் கொள்வனவு | (498,564,648) | (24,097,640) |
| விற்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை வருமானம் | 485,126 | 6,187,150 |
| பெற்ற வட்டி | 146,594,141 | 145,934,507 |
| ஏனைய நடைமுறையல்லாத சொத்துகளின் அதிகரிப்பு | (30,577) | 816,022 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(1,096,587,851)** | **(276,674,052)** |
| | | |
| **நிதியீட்டச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி பங்களிப்பு | (100,000,000) | (100,000,000) |
| **நிதியீட்டச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு** | **(100,000,000)** | **(100,000,000)** |
| | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை தேறிய அதிகரிப்பு / (குறைவு) | (331,432) | 1,212,997 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 1,767,448 | 554,451 |
| **காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை (குறிப்பு ஆ)** | **1,436,015** | **1,767,448** |

| | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| **குறிப்பு அ - முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறித்த காலப்பகுதியில் காசு உட்பாய்ச்சல் | 86,999,367,276 | 79,643,112,742 |
| குறித்த காலப்பகுதியில் காசு வெளிப்பாய்ச்சல் | (87,744,439,170) | (80,048,626,833) |
| **தேறிய காசுப்பாய்ச்சல்** | **(745,071,893)** | **(405,514,091)** |
| | | |
| **குறிப்பு ஆ - காசும் காசுக்குச் சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி - இரத்மலானை கிளை | 18,550 | 44,313 |
| இலங்கை வங்கி - தொகுதிக் கிளை | 1,049,142 | 1,512,315 |
| மக்கள் வங்கி - இரத்மலானை கிளை | 136,590 | 136,590 |
| மக்கள் வங்கி - தொகுதிக் கிளை | 174,433 | 7,559 |
| காசு மீதி | 37,550 | 46,671 |
| **சில்லறைக் காசேட்டு மீதி** | 19,750 | 20,000 |
| | **1,436,015** | **1,767,448** |

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

## 1. கூட்டிணைவுத் தகவல்கள்

### பொது

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இது, இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை என்னும் முகவரியில் அமைந்துள்ள அரச கூட்டுத்தாபனமாகும்.

2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களை கூட்டுத்தாபனம் தயார் செய்கின்றது. இந்த நிதியியல் கூற்றுக்கள் 2023ம் ஆண்டு மாசி மாதம் 27ம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

### பிரதான செயற்பாடுகள்

பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு

(a) ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கையைச் செய்து கொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல்.

(b) துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல்.

(c) சாத்தியமான முதலீட்டாளர்களுடன் சர்வதேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்.

(d) மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

(e) வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல்.

(f) கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

## 2. தயார்படுத்தலின் அடிப்படை

### 2.1. இணங்கியொழுகுதல் பற்றிய கூற்று

நிதியியல் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2. அளவீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுகள் வரலாற்று ரீதியான செலவினங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையானது நிதியியில் கூற்றுக்களுக்கான தமது பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறது.

### 2.3. நிறுவன தொடர்ச்சிக் கருத்து

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கைகள் நிறுவன தொடர்ச்சிக் கருத்து அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 3.1.1. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை வெளியக சுயாதீன மதிப்பாளரினால் மதிப்பிடப்பட்டு நியாயமான பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. மீள்மதிப்பிடப்பட்டுள்ள சொத்து ஒன்றின் போதுமான அளவு ஒழுங்குடன் அதனுடைய கொண்டிருக்கும் தொகையில் இருந்து வேறுபடாத வகையில், நியாயமான தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மதிப்பிடலானது மேற்கொள்ளப்படுகின்றது.

இடையிடையே ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முக்கியமான பாகங்களைப் பதிலீடு செய்ய நேரிடின், கூட்டுத்தாபனம் பதிலீடு செய்யப்பட்ட பாகத்தை அங்கீகரிப்பதுடன் புதிய பாகத்தை அதன் சொந்த தொடர்பான பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கின்றது. அவ்வாறே, பாரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டால், அங்கீகரித்தல் தகவுதிறன்கள் ஈடு செய்யப்படின், ஒரு பதிலீடாக அதன் ஆகுசெலவு பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் தொகையுடன் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய எல்லா திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வருமானக் கூற்றில் கூறப்பட்டதாக அங்கீகரிக்கப்படுகின்றன

#### 3.1.2. தேய்வு

தேய்வு LKAS 16 இல் உள்ளதன் படி வழங்கப்படுகிறது. நடைமுறை அல்லாத சொத்துக்களின் தேய்வு பாவிக்கப்படும் நாளிலிருந்து கணிப்பிட ஆரம்பிக்கப்படுகிறது. அதேவேளை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்ட / முடிவு செய்யப்பட்ட குறித்த திகதியிலிருந்து தேய்வு கைவிடப்படுவதோடு SLFRS 05 இற்கு ஏற்ப தேய்வானது நேர்கோட்டு முறை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உத்தேச பயன்படு காலம் பின்வருமாறு

| | |
|---|---|
| குத்தகைக் காணி | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| இயற்கை நிலக்காட்சியமைப்புச் செலவுகள் | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| கட்டிடங்கள் | 20 வருடங்கள் |
| வாகனக் கொட்டகை | 12 வருடங்கள் |
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 20 முதல் 1 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 8 முதல் 3 வருடங்கள் |
| மோட்டார் சைக்கிள் | 7 வருடங்கள் |
| துவிச்சக்கர வண்டி மற்றும் வண்டிகள் | 20 முதல் 7 வருடங்கள் |
| உபகரணங்கள் | 25 முதல் 1 வருடங்கள் |
| கணினி உதிரிப்பாகங்கள் | 5 முதல் 1 வருடங்கள் |
| கணினி மென்பொருள் | 5 முதல் 1 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 20 முதல் 3 வருடங்கள் |
| கருவிகள் | 15 முதல் 1 வருடங்கள் |

### 3.1.3. அருவச் சொத்துகள்

பிரத்தியேமாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துகள் ஆரம்ப அங்கீகார ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துகள் திரண்ட கடன் தீர்த்தல் மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்து ஆகுசெலவில் கொண்டுசெல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி ஆகுசெலவுகள் நீங்கலாக, உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட அருவச் சொத்துகள் மூலதனமாக்கப்படாது, செலவு ஏற்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் செலவினம் பிரதிபலிக்கப்படுகின்றது.

### 3.1.4.ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சேதம்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி, வருடாந்தம் அல்லது கொண்டு செல்லும் பெறுமதி மீண்டும் பெற முடியாதது என நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் குறித்துக் காட்டும்போது மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய குறித்துக்காட்டல்கள் இருக்குமாயின், கொண்டு செல்லும் பெறுமதி உத்தேச அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமாயின், சொத்துகள் அறவிடக்கூடிய தொகை குறைத்து எழுதப்படுகின்றன. சேத இழப்புகள் அதே சொத்துக்கான முன்னைய மீள் மதிப்பீட்டு மிகையை வழங்காதவிடத்து வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.1.5. நிதி சாரா சொத்துகளின் சேதம்

ஒரு சொத்து சேதமடையலாம் என்பதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றனவா என ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. ஏதேனும் குறிகாட்டிகள் தென்படின், அல்லது ஒரு சொத்தின் வருடாந்த சேத மதிப்பீட்டுச் சோதனை தேவைப்படுத்தப்படும்போது, கூட்டுத்தாபனம் சொத்தின் பெறக்கூடிய தொகையை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் காசை உருவாக்கும் அலகுகளில் (CGU) இருந்து விற்பனைக்கான ஆகுசெலவைக் கழித்து வரும் தொகையில் கூடியது என்பதுடன் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதி ஏனைய சொத்துகளிலிருந்து அல்லது சொத்துகளின் தொகுதியிலிருந்து பெருமளவில் தங்கியிராத காசுப்பாய்ச்சலை சொத்து உருவாக்காதவிடத்து, ஒரு தனிப்பட்ட சொத்துக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அல்லது CGU அதன் அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமிடத்து, அந்த சொத்து சேதமடைந்ததாகக் கருதப்பட்டு அதன் அறவிடக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடும்போது, பணத்தின் காலப் பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதம் மற்றும் சொத்துக்கான குறித்த இடர் ஆகியவற்றைப் பயன்படுத்தி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலுக்கு கழிவு வழங்கப்படுகின்றது. விற்பனைக்காக ஆகுசெலவைக் கழித்து நியாய விலையை நிர்ணயிக்கையில், அண்மைக்கால சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பின் அவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் அடையாளம் காண முடியாதவிடத்து, ஒரு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

### 3.1.6. வரி விதிப்பு

#### 3.1.6.1. நடைமுறை வரி விதிப்பு

நடைமுறை வரிச்சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வரி அறவிடும் ஆணையகத்திற்கு அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டதாகும். தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்பட்டவைகளாகும்.

அதன் பிரகாரம், வரி விதிப்புக்கான ஏற்பாடு 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க அரசிறைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின் பிரகாரம் வரி நோக்கங்களுக்காகத் திருத்தப்பட்டவாறாக அவ்வாண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறை ஆண்டின் வரி விதிப்புக்கான ஏற்பாடு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்துக்கு அமைவாக கணக்கீட்டு இலாபத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.1.6.2. தாமதித்த வரி விதிப்பு

நிதியியல் நிலைமை பற்றிய கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக, தாமதித்த வரிப் பொறுப்பு மற்றும் சொத்துகளை நாம் கவனத்தில் கொண்டோம். எமது நிதிக் கூற்றில், ஓய்வு பெறல் பணிக்கொடை ஏற்பாட்டுக்காக நிலையான சொத்துகள் மற்றும் தாமதித்த வரிச் சொத்து ஆகியவற்றுக்கான புத்தக மற்றும் வரி குறைத்து எழுதப்பட்ட தாமதித்த வரிப்பொறுப்பை நாம் பிரதானமாக அங்கீகரித்தோம். தாமதித்த வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை வருமான வரி வீதத்தில் அளவிடப்படுகின்றன.

### 3.2. சரக்கிருப்புகள்

'முதலில் வந்து முதலில் செல்பவை' என்னும் அடிப்படையில் மதிப்பிடப்படும் உபயோகத்தில் இல்லாத மற்றும் மெதுவாக விற்பனையாகும் பொருட்களுக்கான உரிய தொகையை ஒதுக்கிய பின்னர் ஆகுசெலவினம் மற்றும் தேறிய அங்கீகரிக்கக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதோ அதில் சரக்கிருப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

### 3.2.1. சரக்கிருப்புகளின் அளவீடு சரக்கிருப்புகளின் ஆகுசெலவு

**மூலப்பொருட்கள்**

ஏதேனும் இடைநேர்விளைவான செலவினங்களுடனான கொள்முதல் ஆகுசெலவுகள்

**நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை**

மூலப்பொருட்களின் ஆகுசெலவு மற்றும் வேறுபடக்கூடிய் உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**முடிவுப் பொருட்கள்**

மூலப்பொருட்களின் ஆகு செலவு மற்றும் வேறுபடக்கூடிய உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**ஏனைய இருப்புகள்**

ஆகு செலவு நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

### 3.2.2. வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையிலும் அதனைத் தொடர்ந்து பயனுறுதியான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி சேதங்களுக்கான ஏற்பாடுகளைக் கழித்து கடன் தீர்த்தல் செலவினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. 31-12-2022 உள்ளவாறான MSD நீண்ட நிலுவை கடன்பட்டோர் சந்தேகக்கடன் பொருட்டு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பாடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

### 3.2.3. காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

### 3.2.4. தொடர்பான தரப்பு கொடுக்கல் வாங்கல்கள்

**முக்கிய நிர்வாக பணியாளர்களுடனான பரிமாற்றங்கள் ("KMP")**

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் மற்றும் பொறுப்பு உள்ளவர்கள் முக்கிய நிர்வாக பணியாளர்கள் ஆவர். அதன்படி, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் (நிர்வாக மற்றும் நிர்வாகமற்ற பணிப்பாளர்கள் உட்பட) முக்கிய நிர்வாக பணியாளர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய நிர்வாக பணியாளர்களுக்கான (பணிப்பாளர் சபை) இழப்பீடு பின்வருமாறு.

| | 2022 | 2021 |
|---|---|---|
| குறுகிய கால நன்மைகள் | 2,779,163 | 2,646,293 |
| பரிசு சீட்டு | 100,000 | 162,500 |

**அரசு மற்றும் அரசு தொடர்பான அமைப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்கள்**

கூட்டுத்தாபனம் அதன் சாதாரண தொழிற்பாட்டு நடவடிக்கைகளில், தொடர்பான தரப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. தொடர்பான தரப்புகள் என்பது இலங்கை அரசாங்கம் (கூட்டுத்தாபனத்தின் இறுதியான உரிமையாளர் அரசாங்கம் என்ற வகையில்) பல்வேறு அரச திணைக்களங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட்டாக முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆனால் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் அல்லாதவையுமான அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரம் பின்வருமாறு:

### கொடுக்கல் வாங்கலின் தன்மை

| கொடுக்கல் வாங்கல் | 2022 | 2021 |
|---|---|---|
| இலங்கை அரசாங்கப் பிணையங்களில் கூட்டுத்தாபனத்தின் முதலீடு | 4,398,099,756 | 3,452,508,244 |
| இவ்வாண்டில் அரசாங்கத்துக்குச் செலுத்திய மிகை | 100,000,000 | 100,000,000 |
| சு.சே.தி, அ.ம.கூ மற்றும் விநியோகஸ்தர்களுக்கான விற்பனைகள் | 16,620,184,659 | 8,538,944,511 |

| நிலுவையாக உள்ள மீதி | 2022 | 2021 |
|---|---|---|
| அ.ம.கூ இடமிருந்து பெறவேண்டியவை | 33,288,612 | 130,870,042 |
| சு.சே.தி இடமிருந்து பெறவேண்டியவை | 2,345,024,254 | 205,312,012 |

### 3.2.5. மூலதனம்

2022 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டில் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

### 3.2.6. நிதியியல் நிலைமைக் கூற்றுத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுத் திகதிக்குப் பிந்திய எல்லா நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து நிதியியல் கூற்றில் பொருத்தமான திருத்தங்களும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.2.7 ஆய்வுச் செலவு

புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவையும் புரிந்துணர்வையும் பெறும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுச் செயற்பாடுகள் மீதான செலவினம் ஏற்படுகின்றபோது அது இலாபம் அல்லது செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 4. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 4.1. ஓய்வுப்பயன் கடப்பாடு

#### 4.1.1 வரைவிலக்கணம் செய்யப்பட்ட பயன் திட்டம் ஓய்வூதியப் பணிக்கொடை

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனம் பணிக்கொடையைச் செலுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. ஓர் ஊழியர் கூட்டுத்தாபனத்தில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவையாற்றும்போதுதான் அவருக்குப் பணிக்கொடை செலுத்த வேண்டிய பொறுப்பு கூட்டுத்தாபனத்திற்கு எழுகின்றது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு ஏற்பாடு முன் கொண்டு செல்லப்படுகின்றது. அதன் விளைவாக ஏற்படும் வருட ஆரம்பத்தில் முன் கொண்டுவரும் ஏற்பாட்டுக்கும் வருட இறுதியில் முன் கொண்டு செல்லும் ஏற்பாட்டுக்கும் இடையிலான வேறுபாடு தொடர்பாக வருமானக்கூற்றில் குறிப்பிடப்படுகின்றது.

LKAS 19 – பணியாளர் நன்மைகள் பரிந்துரைத்தபடி திட்டமிடப்பட்ட அலகு கடன் (PUC) முறையைப் பயன்படுத்தி அறிக்கை திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரினால் வரையறுக்கப்பட்ட நன்மை கடமை கணக்கிடப்படுகிறது

கணிப்பீட்டில் பயன்படுத்தப்படும் பிரதான ஊகங்கள் பின்வருமாறு.

| | 2022 | 2021 |
|---|---|---|
| எதிர்பார்க்கப்படும் வருடாந்த சராசரி சம்பள உயர்வு | 15.00% | 6.00% |
| கழிவு வீதம் / வட்டி வீதம் | 18.00% | 11.50% |
| பணியாளர் புரள்வுக் காரணி | 1.50% | 1.50% |

இந்த பொறுப்புகளுக்கு தே.சே.வ (NSB) இல் திறைசேரி முறிகளில் நிதியிடப்பட்டுள்ளது. இந்த விடயம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் குழுவாக்கப்பட்டுள்ளது.

#### 4.1.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

**ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்' ஆகியவற்றுக்குத் தகுதியான எல்லா ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் உரிய பங்களிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டுள்ளன.

**ஊழியர் சேமலாப நிதியம்**

கூட்டுத்தாபனத்தின் எல்லா ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களாக இருப்பதோடு இதற்கு கூட்டுத்தாபனமானது ஊழியரின் ஒருங்கிணைந்த சம்பளத்தில் 15 வீதத்தினை பங்களிக்கின்றது.

**ஊழியர் நம்பிக்கை நிதியம்**

கூட்டுத்தாபனமானது ஒவ்வொரு ஊழியரினதும் நம்பிக்கை நிதியத்திற்காக ஊழியரின் ஒருங்கிணைந்த சம்பளத்திலிருந்து 3 வீதத்தினை பங்களிக்கின்றது.

### 4.1.3 வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள்

வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையில் மதிக்கப்பட்டு அதன் பின்னர் பயனுறுதியான வட்டி வீத முறையிலிருந்து சேதத்துக்கான இழப்பைக் கழித்தல் முறையைப் பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அளவிடப்படுகின்றன. 2022.12.31 இல் முக்கிய தாக்கம் உள்ளவாறு ஏதேனும் அதனைத் தொடர்ந்த அளவிடப்பட்ட செலவினத்துக்கு கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

### 4.1.4 ஏற்பாடு

#### பொது

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது நெருக்குதலான) கூட்டுத்தாபனம் கொண்டுள்ள போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதாரப் பயனைக் கொண்ட வளத்தின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுத்தப்படலாம். கடப்பாட்டுத் தொகையிலிருந்து நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படலாம். ஏற்பாடுகளில் சில அல்லது எல்லாம் மீளளிப்புச் செய்யப்படவேண்டும் என கூட்டுத்தாபனம் எதிர்பார்க்குமிடத்து, உதாரணமாக ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ், மீளளிப்பு நடைமுறையில் நிச்சயமாக உள்ள போது மட்டுமே அது பிரத்தியேகமான சொத்தாகக் கருதப்படுகின்றது. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினம் வருமானக் கூற்றில் இடம்பெறுகின்றது.

பணத்தின் நேரப் பெறுமதி முக்கியமாயின், பொருத்தமானவிடத்து, பொறுப்புக்கான குறித்த இடர்களைப் பிரதிபலிக்கும் தற்போதைய வரிக்கு முந்திய வீதத்தைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவு வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கழிவு வழங்கல் பயன்படுத்தப்படும்போது, காலப்போக்கில் ஏற்படும் ஏற்பாட்டின் அதிகரிப்பு நிதிச்செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

## 5. வருமானக்கூற்று

வருமானக் கூற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, செலவுகள் முறைமை செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் செயலாற்றக் கூறுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதனால், அம்முறை கையாளப்படுகின்றது.

### 5.1.1 புரள்வு

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் புரள்வானது, சுகாதார சேவைகள் திணைக்களம், விநியோகஸ்தர்கள் மற்றும் அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான விற்பனைகளை உள்ளடக்குகின்றது.

### 5.1.2 வருமானத்தை அங்கீகரித்தல்

கொடுப்பனவுகள் எப்போது மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொருட்படுத்தாது பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்கு உட்பாய்வதுடன் வருமானத்தை நம்பத்தகுந்தவாறு அளவிட முடியும் என்பது சாத்தியமானதாகும் என்னும் அளவுக்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மற்றும் வரிகள் அல்லது தீர்வைகளைக் கழித்து, பெற்ற அல்லது பெறக்கூடிய நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது. வருமானம் பிரதானமாகவா அல்லது செயலாண்மையாகவா செயற்படுகின்றது என்பதை நிர்ணயிப்பதற்காக கூட்டுத்தாபனம் அதன் வருமான ஒழுங்குகளை குறித்த தகவுதிறன்களுக்கு எதிராக மதிப்பிடுகின்றது. அதன் எல்லா வருமான ஒழுங்குகளிலும் அது பிரதானமாகச் செயற்படுகின்றது என கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. வருமானத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்த அங்கீகார தகவுதிறன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

#### பொருட்களின் விற்பனை

மருத்துவ விநியோக பிரிவு, அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் விநியோக வழிகளின் ஊடாக மருந்துகள் விற்பனை செய்வதன் மூலம் கூட்டுத்தாபனம் அதன் வருவாயை உருவாக்குகிறது.

நிறுவனம் வாங்குபவருக்கு பொருட்களின் உரிமையில் குறிப்பிடத்தக்க ஆபத்து மற்றும் வெகுமதிகளை மாற்றும் போது பொருட்களின் விற்பனையின் வருவாய் அங்கீகரிக்கப்படுகிறது.

பின்வரும் மூலங்களிலிருந்து வருவாயை கூட்டுத்தாபனம் அங்கீகரிக்கிறது.

(அ) மருந்து வழங்கல் பிரிவுக்கு மருந்துகளை வழங்குதல் (அரச மருத்துவமனைகள்).

கூட்டு உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்தி, மருந்து வாங்குதல் மற்றும் மருந்து வழங்கல் பிரிவுக்கு விற்பனை செய்தல் ஆகியவற்றில் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது. தயாரிப்புகள் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மாற்றப்படும் கட்டத்தில் வருவாய் அங்கீகரிக்கப்படுகிறது. அ.ம.கூ. ஆனது கூட்டிணைவு முயற்சியின் பொருட்களை மருந்து வழங்கல் பிரிவிற்கு வழங்கும் போது கொள்வனவு செய்யும் விலைக்கு 6% வீதத்தினை சேர்க்கிறது.

## கூட்டுத்தாபனமானது பின்வரும் கூட்டுமுயற்சி நிறுவனங்களை உருவாக்கியுள்ளது.

| நிறுவனத்தின் பெயர் | கூட்டுமுயற்சி நிறுவனத்தின் இடம் | உரிமையாண்மையின் வீதம் | பிரதான தொழிற்பாடு |
|---|---|---|---|
| செலோஜன் லங்கா (தனியார்) லிமிடெட் | இல. 116, லெயார்ட்ஸ் புரோட்வே, கொழும்பு-14 | 10% | மருந்து வழங்கல் பிரிவிற்கு அ.ம.கூ. ஊடாக மருந்துகளை தயாரித்தல், விநியோகித்தல் |
| டியத்த பார்மசூட்டிகல் அன்ட் கெல்த்ஹெயார் (தனியார்) லிமிடெட் | இல. 53/A/1, பட்டகம வடக்கு, ஜா-எல. | 10% | மருந்து வழங்கல் பிரிவிற்கு அ.ம.கூ. ஊடாக மருந்துகளை தயாரித்தல், விநியோகித்தல் |
| குளோசாந்ரே (தனியார்) லிமிடெட் | இல. 372, சேர் குடாரத்வத்தே மாவத்தை, தொடங்வல, கண்டி. | - | மருந்து வழங்கல் பிரிவிற்கு அ.ம.கூ. ஊடாக மருந்துகளை தயாரித்தல், விநியோகித்தல் |
| மெடிகொம் (தனியார்) லிமிடெட் | இல. 20, விஜித வீதி, நதிமால, தெகிவளை. | - | மருந்து வழங்கல் பிரிவிற்கு அ.ம.கூ. ஊடாக மருந்துகளை தயாரித்தல், விநியோகித்தல் |
| யாடன் லபோறரோறிஸ் (தனியார்) லிமிடெட். | இல.67, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு | - | மருந்து வழங்கல் பிரிவிற்கு அ.ம.கூ. ஊடாக மருந்துகளை தயாரித்தல், விநியோகித்தல் |

கூட்டுமுயற்சியில் கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுமுயற்சி நிறுவனம் என்பன மேற்சொன்ன பங்குடமை தொடர்பில் பங்குதாரர் ஒப்பந்தம் ஒன்றினை செயற்படுத்த முடியும். இந்த கூட்டு முயற்சி நிறுவனங்கள், குறித்த ஒப்பந்தம் நிலுவையில் உள்ள வரையில் பங்குகளின் விகிதம் அ.ம.கூ. வழங்கப்படுவதை உறுதி செய்யும்.

**பங்குகளை வைத்திருப்பது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

| பங்கு வைத்திருக்கும் நிறுவனம் | பங்குகளின் எண்ணிக்கை | வழங்கிய திகதி | பெறுமதி (ரூபா.) |
|---|---|---|---|
| செலோஜன் லங்கா (தனியார்) லிமிடெட் | 3,000,000 | 21.10.2020 | 3,000,000 |
| டியத்த பார்மசூட்டிகல் அன்ட் கெல்த்ஹெயார் (தனியார்) லிமிடெட் | 1,500,000 | 21.10.2020 | 1,500,000 |
சேதமடைந்தவைமற்றும் பாவனைக்குட்படாதவற்றுக்கான சீராக்கம் 2021

| விபரம் | 01.01.2021 இல் உள்ளவாறு மீதி | இவ் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவை | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | இவ்வாண்டில் மீள்பாவனை | 31.12.2021 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| பொறிகளும் இயந்திரங்களும் | 29,962,681 | 459,150 | (26,807,531) | (2,924,148) | 690,152 |
| உபகரணங்கள் | 27,133,205 | 170,968 | (18,950,628) | (8,413,577) | (60,032) |
| கணனி உதிரிப்பாகங்கள் | 195,380 | - | (155,900) | (39,480) | - |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 493,748 | 50,632 | (336,364) | (157,384) | 50,632 |
| கருவிகள் | 1,474,373 | 3,600 | (1,474,175) | (200) | 3,598 |
| **மொத்தம்** | **59,259,387** | **684,350** | **(47,724,599)** | **(11,534,789)** | **684,350** |

குறிப்பு - 13

குத்தகை முற்கொடுப்பனவு

கிரயம் 2021

| விபரம் | 01.01.2022 இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2022 இல் உள்ளவாறு கிரயம் |
|---|---|---|---|---|
| குத்தகைக் காணி | 4,920,845 | - | - | 4,920,845 |
| **மொத்தம்** | **4,920,845** | - | - | **4,920,845** |

தேய்வு

| விபரம் | 01.01.2021 இல் உள்ளவாறு திரண்ட தேய்வு | ஆண்டுக்கான தேய்வு | கையுதிர்ப்பு தொடர்பாக திரண்ட தேய்வு | 31.12.2021 இல் உள்ளவாறு கிரயம் |
|---|---|---|---|---|
| குத்தகைக் காணி | 1,687,591 | 48,989 | - | 1,736,579 |
| **மொத்தம்** | **1,687,591** | **48,989** | - | **1,736,579** |

குறைத்து எழுதிய பெறுமதி

| விபரம் | 31.12.2021 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| குத்தகைக் காணி | 3,184,266 |
| **மொத்தம்** | **3,184,266** |

## குறிப்பு - 14

| ஏனைய நடைமுறையல்லாத சொத்துகள் | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| வைப்புகள் | 970,000 | 970,000 |
| பிணைய வைப்புகள் | 391,876 | 361,299 |
| | **1,361,876** | **1,331,299** |

## குறிப்பு - 15

| பொருட்பதிவேடு | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | 1,541,689,388 | 880,226,447 |
| பொதியிடும் பொருட்கள் | 210,012,597 | 84,632,732 |
| முடிவுப் பொருட்கள் | 140,154,066 | 304,972,919 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | 316,824,341 | 162,768,911 |
| வழிமாற்றுற் சரக்குகள் - மூ/பொ | 581,726,959 | 13,708,270 |
| இருப்புகள் - உருவாக்கல் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 27,143,834 | 8,385,167 |
| உதிரிப் பாகங்கள் - பொறிகளும் இயந்திரங்களும் மற்றும் நுகர்பொருட்கள் | 192,524,751 | 166,369,532 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 4,515,967 | 952,692 |
| பொருட்பதிவேடு - காகிதாதிகள் | 4,025,183 | 2,009,774 |
| இருப்புகள்-கடன் கொடுக்கப்பட்டது | 39,081 | - |
| | **3,018,656,167** | **1,624,026,442** |

## குறிப்பு - 16

| வியாபாரக் கடன்பட்டோரும் பெறவேண்டியவைகளும் | | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| கடன்பட்டோர் - **SPC** | | 5,373,799 | 18,555,750 |
| கடன்பட்டோர் - **MSD** | 2,345,024,254 | | 205,312,012 |
| (-) ஐயக்கடனுக்கான ஏற்பாடு | (312,417,918) | 2,032,606,336 | - |
| கடன்பட்டோர் - வினியோகத்தர்கள் | | 226,920,453 | 221,600,173 |
| இடருதவிக் கடன்கள் | | 54,934,168 | 58,205,185 |
| பெறத்தக்கவை | | 99,745,646 | 471,780 |
| துவிசக்கர வண்டிக் கடன்கள் | | 9,950,138 | 1,849,582 |
| ஊழியர் கடன் | | - | 176,500 |
| விழா முற்பணம் | | 531,000 | 547,000 |
| இறக்குமதி வைப்பு மீளளிப்புகள் | | 1,048,000 | 918,500 |
| | | **2,431,109,540** | **507,636,481** |

## குறிப்பு - 17

| முற்கொடுப்பனவுகள் | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| முற்பணம் கொடுப்பனவுகள் | 19,690,504 | 2,399,007 |
| முற்பணம் கொடுப்பனவுகள் - இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் | 22,280,685 | 14,145,065 |
| முற்கொடுப்பனவுகள் | 7,713,580 | 7,800,171 |
| பணியாளர்களுக்கான முற்கொடுப்பனவுச் செலவு | 11,892,551 | 6,297,946 |
| | **61,577,319** | **30,642,190** |

**குறிப்பு - 18**

| ஏனைய நிதியியல் சொத்துகள் | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---:|---:|
| திறைசேரி உண்டியல்கள் | 4,241,085,643 | 3,316,722,413 |
| தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள திறைசேரி உண்டியல்கள் | 157,014,115 | 135,785,831 |
| | **4,398,099,758** | **3,452,508,244** |

**திறைசேரி உண்டியல்களில் முதலீடு**
REPO வானது நடைமுறை சொத்தாக வகைப்படுத்தப்படுவதுடன் கழிக்கப்படும் செலவிலேயே கணிக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனமானது பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் அரச வங்கிகளில் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) REPO களில் முதலிடுவதன் மூலம் கடன் அபாயத்திற்கு முகங்கொடுப்பதை மட்டுப்படுத்துகின்றது.

**குறிப்பு - 19**

| வங்கியிலும் கையிலும் உள்ள காசு | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---:|---:|
| இலங்கை வங்கி - இரத்மலானை கிளை | 18,550 | 44,313 |
| இலங்கை வங்கி - தொகுதிக் கிளை | 1,049,142 | 1,512,315 |
| மக்கள் வங்கி - இரத்மலானை கிளை | 136,590 | 136,590 |
| மக்கள் வங்கி - தொகுதிக் கிளை | 174,433 | 7,559 |
| கையிலுள்ள காசு | 37,550 | 46,671 |
| சில்லறைக் காசேட்டு மீதி | 19,750 | 20,000 |
| | **1,436,015** | **1,767,448** |

**குறிப்பு - 20**
**சொல்லப்பட்ட மூலதனம்**
சொல்லப்பட்ட மூலதனம் ஜப்பானிய யென் 2.564 மில்லியனை ரூபா 0.186 வீதத்தில் மாற்றப்பட்ட ரூபா 476,904,000.00 மற்றும் பொதுத் திறைசேரியினால் பங்களிப்புச் செய்யப்பட்ட ரூபா 208,375,000.00 மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றப்பட்ட ரூபா 4,800,000.00 பெறுமதியான காணி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

## குறிப்பு - 21

| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---:|---:|
| ஆண்டின் ஆரம்பத்தில் மீதி | 219,013,636 | 167,206,928 |
| இவ்வாண்டில் தாமதித்த வரியாக கட்டணம்/(திருப்பல்) | 432,179,647 | 51,806,708 |
| | **651,193,284** | **219,013,636** |

**குறிப்பு - 22**
**JICA கடன் - அரசாங்க மூலதன முதலீடு**
SPMC 2018 ஆம் ஆண்டில் ஜப்பானிய யென் 1,239,888,000 (ரூ. 2,416,094,044) ஐப் பெற்றது, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமைக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையிலான அடிப்படை சமூக சேவைகளை மேம்படுத்துவதற்காக JICA நிதியுதவி திட்டத்தின் கீழ் (Loan Agreement No. SLP-105 dated 28th March 2012). இந்த துஜஊயு கடன் ஏற்கனவே இலங்கையின் அரசாங்க கடனாக சேர்க்கப்பட்டுள்ளது. ஜப்பனீஸ் யென் - 1,239,888,000 தொகையில் உபகரணங்கள், வடிவமைப்பு சேவைகள், கட்டிட மறுசீரமைப்பு மற்றும் கட்டுமான நிறுவல் மற்றும் பிற சேவைகளை வாங்குவதற்கான இந்த JICA நிதியுதவி திட்டத்தின் SPMC பகுதி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| | JPY |
|---|---:|
| வெளிநாட்டிலிருந்து வழங்கப்பட்ட பொறி மற்றும் உபகரணம் | 910,075,230 |
| வடிவமைப்பு சேவைகள் | 3,216,529 |
| கட்டிட புதுப்பித்தல் மற்றும் கட்டுமானம் | 312,850,251 |
| நிறுவல் மற்றும் ஏனைய சேவைகள் | 13,745,990 |
| **மொத்தம்** | **1,239,888,000** |

ஜுன் 26, 2023 தேதியிட்ட PED/S/SPMC/04/13 கடிதத்தின் மூலம் SPMC தலைவருக்குத் தெரிவிக்கப்பட்ட பொது நிறுவனங்களின் துறை, இந்த SPMC பகுதி ஜுன் 2023க்குப் பிறகு அரசாங்க மூலதன முதலீடாக அங்கீகரிக்கப்படும். அதன்படி, அதற்கான திருப்பிச் செலுத்தப்படாது SPMC. இந்த JICA கடன் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் ஈக்விட்டியின் கீழ் அரசாங்க மூலதன முதலீடாக சரிசெய்யப்படும்.

**குறிப்பு - 23**

**வியாபாரமும் ஏனைய செலுத்தவேண்டியவைகளும்**

| | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - பொதியிடும் சாதனங்கள் | 45,766,600 | 20,118,666 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - மூலப்பொருட்கள் | 7,463,690 | 46,555,917 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - காகிதாதிகள் | 623,978 | 9,364,460 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - உபகரணங்களும் பொறிகளும் | 2,579,215 | 6,245,070 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - இரசாயனப் பொருட்கள் | - | 105,448 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - நலன்புரி | 1,855,033 | - |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - பொது | 408,482,568 | 90,487,573 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - வங்கி | 60,050,797 | 37,923,364 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - ஊழியர்கள் | 4,525,824 | 4,352,764 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - சேவைகள் | 9,684,956 | 5,337,245 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - ஏனைய நிலையான சொத்துக்கள் | - | 25,693 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - கூட்டு முயற்சி | 3,254,473,281 | 321,901,913 |
| ஊழியர் பாதுகாப்பு உத்தரவாதம் - நிதி | 10,882 | 15,917 |
| ஊழியர் பாதுகாப்பு உத்தரவாதம் - களஞ்சியம் | 380,994 | 345,382 |
| விலைகூறல் முறிகள் செலுத்த வேண்டியவை | 31,970,121 | 13,437,054 |
| இருப்பு கட்டுப்பாடு-கடன் எடுக்கப்பட்டது | 7,652,650 | - |
| | **3,835,520,589** | **556,216,467** |

**குறிப்பு - 24**

**ஓய்வுப்பயன் கடப்பாடு**

| | 2022 ஆம் ஆண்டுக்கானது | 2021 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| நிதியியல் நிலைமையில் காணப்பட்ட தொகைகள் பின்வருமாறு | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் தேறிய பொறுப்பு | 110,331,839 | 106,799,808 |
| நடைமுறை சேவை செலவு | 7,050,961 | 6,447,492 |
| வட்டிச் செலவு | 12,688,161 | 9,611,983 |
| கடந்த கால சேவை செலவு | 6,589,058 | - |
| அனுபவித்த (இலாபம்)/நட்டம் | 32,822,249 | (9,873,539) |
| | **169,482,268** | **112,985,744** |
| **கழிக்க:** | | |
| இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (4,101,585) | (2,653,905) |
| | **165,380,683** | **110,331,839** |

கூட்டுத்தாபனத்தின் ஓய்வுப் பயன் பொறுப்பு இயல்பான மற்றும் முகாமைத்துவ ஆலோசகர்கள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிபுணத்துவ மதிப்பீட்டின் அடிப்படையிலானதாகும். ஓய்வுப் பயன் செலவினத்தைக் கணிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிரதான ஊகங்கள்:

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால வருடாந்த சராசரி சம்பள அதிகரிப்பு வீதம் | 15.00% | 6.00% |
| கழிவு வீதம் | 18.00% | 11.50% |
| ஊழியர் புரள்வு காரணி | 1.50% | 1.50% |

**வருமானக் கூற்றில் காணப்பட்ட தொகைகள் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| நடைமுறை மற்றும் கடந்த கால சேவை செலவினம் | 13,640,019 | 6,447,492 |
| வட்டிச் செலவினம் | 12,688,161 | 9,611,983 |

நிபுணத்துவ மதிப்பீடானது 2022 டிசம்பர் 31இல் உள்ளவாறு தற்போதைய நிதியியல் நிலைமையை மதிப்பிட்டு அவற்றின் சிறந்த மதிப்பீட்டைப் பெறுவதற்காகும்.

**குறிப்பு 25**
**தொடர்பான தரப்பின் வெளிப்படுத்தல்கள்**
முக்கியத்துவம் வாய்ந்த தரப்பு தொடர்பான வெளிப்படுத்தல்கள் பின்வருமாறு:

| நிறுவனம் | | தொடர்பு | கொடுக்கல் வாங்கலின் தன்மை | இவ்வாண்டில் விற்பனை |
|---|---|---|---|---|
| மருந்து வழங்கல் பிரிவு | | வாடிக்கையாளர் | பொருட்கள் விற்பனை | 13,927,795,651 |
| அரச மருந்துக் கூட்டுத்தாபனம் | - விநியோகம் மூலம் | வாடிக்கையாளர் | பொருட்கள் விற்பனை | 21,141,690 |
| | - ஒப்பந்தம் மூலம் | வாடிக்கையாளர் | பொருட்கள் விற்பனை | 108,406,125 |
| விநியோகம் | | | | 2,583,982,882 |
| **மொத்தம்** | | | | **16,620,184,659** |

**குறிப்பு 26**
**மீள்மதிப்பீட்டு ஒதுக்கு**
அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களும் அருவச் சொத்துக்களும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சுயாதீன மதிப்பீட்டாளரொருவரினால் 2021.12.31 ஆம் திகதி செயல்வலுப்பெறக் கூடிய வகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| மொத்த ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீட்டு மிகை | 797,137,916 |
| மீள்மதிப்பீட்டு மிகை மீதான பிற்போடப்பட்ட வரி | (239,141,375) |
| நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள தேறிய மீள்மதிப்பீட்டு மிகை | **557,996,541** |

**மீள்மதிப்பீட்டின்போது கவனத்திற் கொள்ளப்படும் காரணிகள்**
சர்வதேச மதிப்பீட்டு நியமங்களில் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களையும் பின்வரும் காரணிகளையும் கருத்திற்கொண்டு இம்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

1. உள்நாட்டு மற்றும் சர்வதேச முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒரே மாதிரியான இயந்திரங்களின் அல்லது உருப்படிகளின் சந்தைப் பெறுமதி.
2. சொத்துக்களின் தொழில்நுட்ப விவரக்குறிப்பீடுகள் (Technical specifications)
3. மீதமுள்ள பௌதிக ஆயுட்காலம்.
4. பராமரிப்பு வரலாறு உள்ளிட்ட சொத்துக்களின் நிலை.
5. பொறித்தொகுதிகளும் சாதனங்களும் இயங்கும் சூழல் நிலைமைகள்.
6. வினைதிறனான முகாமைத்துவ முறைமைகள் காணப்படல்.
7. பொறித்தொகுதிகளதும் கருவிகளதும் இம்மதிப்பீடு புதிய மீள்நிறுவுகை முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன், இயன்ற எல்லா வேளைகளிலும் ஒப்பீட்டு முறையுடன் (வரலாற்று ரீதியான சந்தைக் கொடுக்கல்வாங்கல்களைப் பகுப்பாய்வு செய்தல்) பெறுமதிகள் மீள பரீட்சிக்கப்பட்டன.
8. வழங்கப்பட்டுள்ள ஆவணங்களும் தகவல்களும் வேலைத்தளங்களுக்குச் செல்லல் மற்றும் உள்நாட்டுத் தகவல்களின் அடிப்படையில் வழங்கப்படும் இம்மதிப்பீடு எமது அபிப்பிராயமாகும். ஆதலால், 3 ஆம் தரப்பின் அக்கறைகளின் எண்ணிக்கை, பண வகையான நட்டங்கள், திரவத்தன்மை இழப்புகள் அல்லது யாதேனும் அவ்வாறான நட்டங்கள் யாதேனுமொரு நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருப்பின், பரிசீலிக்கப்பட்டது.
9. அரச கொள்கைகள், சர்வதேச பண விகிதங்கள், இயற்கை அனர்த்தங்கள், மற்றும் சந்தை ஆதிக்க சக்திகள் மதிப்பீட்டின் மீது தாக்கம் செலுத்தும்.
10. கட்டளைக்கு அமைய மதிப்பீடு செய்வதற்கான கருமங்களுக்காக அன்றி, இம்மதிப்பீட்டு அறிக்கையை பயன்படுத்தல், அவற்றின் கிரயத்திற்கு அமைய சேவைநாடியின் ஒரு பொறுப்பாகும்.
11. மேற்குறித்த மதிப்பீடு, அடிப்படை விலைக்கு மாத்திரமே. ஏற்புடையதாயின், பெறுமதிசேர் வரி (VAT) நீங்கலாக

# தணக்காய்வு அறிக்கை



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எம்எஸ்யு/சீ/எஸ்பீஎம்சீ/1/22/28 2023 யூலை 11

தலைவர்
அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்

**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (ALAuS) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 கூட்டுத்தாபனத்தின் 2022 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு அனுப்பப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நிறுவனத்தின் 2022 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக்கூற்றுக்களுடன் அது சம்பந்தமாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாகக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அது தொடர்பில் எவ்வித உறுதியான முடிவுகளையும் நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வின் போது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறமுடியுமான போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதத்தில் பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதைக் கருத்தில் கொள்தல் எனது பொறுப்பாகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

கூட்டுத்தாபனத்தின் 2022 இன் வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான தவறுகள் இருப்பதாக நான் முடிவு செய்தால் அதைத் திருத்துவதற்காக ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களுக்கு அவ்விடயம் வெளிப்படுத்தப்படும். மேலும் திருத்தப்படாத தவறுகள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு ஆலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவக உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கின்ற தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனைகளிலிருந்து தோன்றுகின்ற வகையில் முறையான நிதி அறிக்கையை கூட்டுத்தாபனம் பேணியுள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுக்கு நேரொத்ததாகும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள ஏனைய சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களின மட்டுப்பாடுகளுக்குள் பின்வரும் வெளிப்படுத்தல்களைச் செய்யும் அளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உள்ளாகியிருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு ஆலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையின் அங்கத்தவர் எவருக்கும் கூட்டுத்தாபனம் சம்பந்தப்பட்ட ஏதாவது உடன்படிக்கை தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக வழக்கமான வியாபார நிலைமைகளை மீறி தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது தொடர்புபட்ட எழுத்துமூல சட்டங்களுக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டுள்ளது என.

| | சட்டங்கள், விதிகள பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக் கொடைச் சட்டத்தின் 6(2)(அ) பிரிவு | ஊழியர் முழுமையாக சேவையாற்றிய ஒவ்வொரு வருடங்களுக்காகவும் அரை மாத சம்பளம் அல்லது வேதனத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக் கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக ஊழியரின் முழு மாத சம்பளத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக் கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களுக்கு பணிக் கொடை படியாக ரூபா 2,050,793 தொகை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 6/97 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | பதிற்கடமைக் காலம் 3 மாதங்கள் அதி உச்ச அளவின் கீழாக இருக்க வேண்டிய போதிலும், பிரதி பொது முகாமையாளர் பொருட்கள் மற்றும் ஆராய்ச்சி பதவிக்காக தொடர்ச்சியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட பதிற்கடமை அடிப்படையில் ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். |
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்துக் கூடிய ஆகக் கூடிய இடர் கடன் தொகை ரூபா 250,000 இற்கு வரையறுக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 49 உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையை விஞ்சி ரூபா 4,677,100 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 388 | தபாலில் அனுப்பப்படுகின்ற சகல காசோலைகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு பேணிச்செல்லப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய பீஈடீ 09/2022 ஆம் இலக்க பொது | வருடாந்தம் ரூபா 20,000 மிகை ஊதியப் படியொன்று மாத்திரம் செலுத்த முடியுமாக |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கை. | இருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 3,130,193 மிகை ஊதியப் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 2009 மார்ச் 09 ஆம் திகதிய டீஏஎம்எஸ்/ஈ4/10/4/090/2 ஆம் இலக்க சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | |
| (i) 03 ஆம் பந்தி | (i) வருகை ஊக்குவிப்பு படியாக மாதத்திற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 2,000 மாத்திரம் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அது ரூபா 3,500 வரை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது.<br>(ii) வருகை ஊக்குவிப்பு படி செலுத்துவதாயின் ஆண்டின் இறுதியில் மிகுதியான விடுமுறைகளுக்காக பணம் செலுத்த முடியாதிருந்த போதிலும், வருகை ஊக்குவிப்ப படி செலுத்தப்பட்ட ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சிய விடுமுறைகளுக்காகவும் ரூபா 11,960,822 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 04 ஆம் பந்தி | புத்தாண்டு மற்றும் நத்தாருக்காக ஆண்டிற்கு ஒருவருக்கு ஒரு தடவை மாத்திரம் ரூபா 6,000 பரிசு உறுதிச்சீட்டு வழங்க முடியுமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 25,000 வீதம் மற்றும் பயிற்சி ஊழியர்களுக்கு ரூபா 12,500 வீதம் மொத்த கிரயம் ரூபா 7,392,062 ஆன பரிசு உறுதிச் சீட்டுக்களும், அதற்கு மேலதிகமாக பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வுனவு செய்வதற்கு நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 12,500 வீதமும், ஏனைய ஊழியர்களுக்கு ரூபா 6,250 வீதமும் மொத்த கிரயம் ரூபா 5,087,500 ஆன பரிசு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) 06 ஆம் பந்தி | ஏதாவது ஒரு ஊழியருக்கு குறித்துரைத்த சேவை தடவைகள் யாவும் வருகை தந்திருந்தால் மாத்திரம் ரூபா 1,000 மாதாந்த படியொன்று செலுத்த முடியுமாக இருந்த போதிலும், பங்குபற்றிய ஒவ்வொரு சேவை தடவைகளுக்காகவும் நிறைவேற்று, பயிற்சி போன்ற நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத ஊழியர்களுக்கு முறையே ரூபா 400, ரூபா 300 மற்றும் ரூபா 200 வீதம் ஆன |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| | வகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 6,399,800 தொகை சேவை தடவை படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலதிகமாக செலுத்தப்பட்ட சேவை தடவைகள் படி ரூபா 3,326,800 ஆகும். |
| (எ) 2015 யூன் 04 ஆம் திகதிய BP/30/15 ஆம் இலக்க மற்றும் 2022 செப்டம்பர் 22 ஆம் திகதிய BP/62/22 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானம் | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்காக செலுத்தப்படுகின்ற துவிச்சக்கர வண்டி கடன் 2015 யூன் 04 ஆம் திகதி முதல் ரூபா 3,000 முதல் ரூபா 75,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய திறைசேரி அங்கீகாரம் இது வரையும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 03(x)ஆம் பிரிவு | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் கைவிட வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கு புறம்பாக 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,980,625 இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டிருந்தது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் காலப்பகுதிக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 492,452,048 செலவில் மருந்து மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் 06 சந்தர்ப்பங்களின் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.3 இன் பிரகாரம் பெறுகைகள் நிறுவனத்தினால் பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை என்பன தயாரிக்கப்படாதிருந்ததுடன், பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒப்பந்த பதிவு சான்றிதழ் வழங்குனர்களிடம் இருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்று நோய் உக்கிரமடைந்து சென்ற காலத்தில் மருந்து வழங்கல் பிரிவின் ஆலோசனையின் படி பெறுகைகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,698,610 ஆன Chloroquine Phosphate BP மூலப் பொருள் விடயங்களில் 600 அலகுகளின் ஆயுட்காலம், மருந்து மூலப் பொருள் களஞ்சியத்திற்கு கிடைத்த திகதியில் இருந்து 02 வருடங்களை விஞ்சியிருந்தது. 2025 மார்ச் 31 ஆம் திகதி அளவில் இந்த மூலப் பொருட்கள் இருப்பு காலாவதியாகுவதற்கு இருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் இந்த இருப்பிற்காக மீள் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைத்த Cloxacillin Sodium BP 250mg கட்டளைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,261,032 பெறுமதியான DHS முத்திரை இடப்பட்ட வெற்று மாத்திரை இருப்பு (E/H Gelatin caps No 1 Brigh Orange/Black) மருத்துவ வழங்கல் பிரிவினால் முன் அறிவித்தல் இன்றி கட்டளை கைவிடப்பட்டதன் காரணமாக இந்த இருப்பு மெதுவாக அசைவதுடன், கணக்காய்வு திகதியில் இந்த இருப்பு காலாவதியாகி இருந்தது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் அடையப்பட்டமைக்கான முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உரிய ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டுடன் நிதி எதிர்வு கூறல்களை உள்ளடக்கி 2022-2026 கால எல்லைக்கான கூட்டிணைந்த திட்டம் (Corporate Plan) வரிசை அமைச்சின் செயலாளரால் அரச பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2022 முதல் 2026 வரையிலான கால எல்லைக்காக கூட்டிணைந்த திட்டம் 2023 மே 04 ஆம் திகதி வரையிலும் பொது முயற்சிகள் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் காலப்பகுதியில் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டம் (Action Plan) மூலம் வெளிப்படுத்தப்படுகின்றமையால் கூட்டிணைந்த திட்டம் அங்கீகரிக்காமையின் காரணமாக காலப்பகுதியின் செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் உற்பதி செயற்திறன் மற்றும் பயனுறுதி தொடர்பாக பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விற்பனைத் திட்டம் மற்றும் மாதாந்த உற்பத்தி திட்டம் என்பவற்றின் பிரகாரம்இனங்காணப்பட்ட மொத்த உற்பத்தி தேவைகளுக்கு இடையே 71 வகையான மருந்து வகைகளில் 777.576 மில்லியன் அலகுகள் வேறுபாடு காணப்பட்டது.

(ii) 2022 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவினால் வழங்கப்பட்ட விற்பனை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 29 வகையான மருந்துகளின் மொத்த தேவையான அலகுகள் 2,545.180 மில்லியன் அலகுகளாக இருந்ததுடன், அந்த 29 மருந்துகளில் மீளாய்வாண்டில் உள்ளபடியான உற்பத்தி அலகுகள் 1,408.081 மில்லியன் அலகுகளாக இருந்தமையால் உற்பத்தி தேவை மற்றும் உள்ளபடியான உற்பத்திகளுக்கு இடையே 1,137.099 மில்லியன் அலகுகள் பற்றாக்குறையை காணக்கூடியாக இருந்தது.

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் ஒட்டுமொத்த விற்பனை வருமானம் ஒவ்வொரு ஆண்டுகளின் போது கூட்டுமுயற்சி உற்பத்திகளில் இருந்து கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு உயர்வடைந்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு வீழ்ச்சியடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டினை கவனத்தில் கொள்ளும் போது கூட்டு முயற்சிகளில் ஒட்டுமொத்த வருமானத்திற்குமான பங்களிப்பு 52.34 சதவீதமும், கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் இருந்து ஒட்டுமொத்த வருமானத்திற்கான பங்களிப்பு 47.66 சதவீதமும் ஆகும்.

(iv) கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட 15 வகையான மருந்துகள் உற்பத்தி கிரயத்தினை விட குறைவான விலை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் அந்த மருந்துகள் அவற்றின் உற்பத்தி கிரயத்தினை விட குறைவாக விற்பனை செய்ததன் மூலம் ரூபா 230,054,679 நட்டத்தை கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

(v) கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற சில மருந்துகளின் விலைகளை தீர்மானிக்கும் போது அதன் உற்பத்தி கிரயத்தினை விட 26 சதவீதம் முதல் 81 சதவீதம் வரை உயர்ந்த இலாபத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் மருந்துகள் விற்பனை மற்றும் விநியோகம் தொடர்பாக பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலப்பொருள் கிடைக்காமை, இயந்திர இயலளவு போதியளவில் இல்லாமை,உற்பத்தி செயற்பாடுகளில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கட்டளையிடப்பட்ட மருந்துகளின் விற்பனை பெறுமதி ரூபா 723,571,830 ஆன 122.53 மில்லியன் மருந்து அலகுகளின் அளவை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக மருந்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த விற்பனை பெறுமதி ரூபா 13,927,795,651 ஆன 2,969.65 மில்லியன் மருந்து அலகுகளுக்கு இடையே கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் விற்பனை பெறுமதி ரூபா 5,365,222,678 ஆன 2,368.29 மில்லியன் மருந்து அலகுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன், மிகுதி விற்பனை பெறுமதி ரூபா 8,562,572,974 ஆன 601 மில்லியன் மருந்து அலகுகள் கூட்டு முயற்சி வழங்குனர்களின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கூட்டு முயற்சி வழங்கிய மருந்து அலகுடன் ஒப்பிடும் போது அதிக மருந்து அலகுகளின் அளவை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதன் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு கணிசமான பங்களிப்பொன்று நாட்டிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் விநியோகஸ்தர்களினால் விற்பனைக்காக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளுக்கு கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக 03 பட்டியல்களுக்குரிய ரூபா 1,915,999.75 பெறுமதியான காசோலை மதிப்பிழந்திருந்தது, அதன் பிரகாரம் விநியோகஸ்தர்களினால் சந்தை மட்டத்தை உரித்தாக்கிக் கொள்வதற்கும், அவர்களிடம் இருந்து உரிய நேரத்தில் பணத்தை அறவிடுவதற்கும் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(iv) கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த விற்பனை திட்டத்தில் உள்ளடக்கப்படாத பெறுமதி ரூபா 1,408.46 மில்லியன் ஆன 71.186 மில்லியன் அலகுகளை உள்ளடக்கிய மருந்துகள் மற்றும் 38 ஏனைய விடயங்கள் என்பன 2022 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(v) 2022 ஆம் ஆண்டின் போது 30 மருந்து வகைகளில் 351.907 மில்லியன் அலகுகள் விற்பனை இலக்கை அடைய முடியாதிருந்த போதிலும், அந்த மருந்துகளின் விலைகளில் ஏற்பட்ட மாற்றத்தால் விற்பனை திட்டத்தில் உள்ள வருமானப் பெறுமதியை விஞ்சி ரூபா 2,622.10 மில்லியன் உள்ளபடியான வருமான பெறுமதியொன்று அடையப்பட்டிருந்தது.

(vi) 2022 யூலை மாதம் முதல் 2022 திசெம்பர் மாதம் வரையான காலத்தில் கூட்டுத்தாபனத்தால் 48 விநியோகஸ்தர்களுக்கு இடையே 16 பேர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 101,456,371 பெறுமதியான விற்பனை இலக்கை அடைந்து கொள்ளமுடியாதிருந்தது.

(vii) விற்பனை பிரிவு விநியோகித்த சில பட்டியல்களுக்காக அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், சில பட்டியல்களை பரீட்சித்து கையொப்பமிடப்படாதிருந்த போதும் அவை அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஈ) உள்நாட்டு மருந்து உற்பத்தி செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் மற்றும் பொருத்தமான தனியார் முதலீட்டாளருக்கு இடையே கூட்டு முயற்சி ஆரம்பிப்பதற்கான முன்மொழிவின் கீழ் கூட்டுத்தாபனத்தால் 17 முதலீட்டாளர்களுடன் மருந்து வகைகளை வழங்குவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் 15 கூட்டு

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு ஆலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

முயற்சியாளர்கள் மாத்ரிரம் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது அந்த கூட்டு முயற்சியுடன் கூட்டுத்தாபனம் கொடுக்கல் வாங்கலை மேற்கொண்ட முறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 15 முதலீட்டாளர்களுடன் மருந்து வழங்கல்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆறு முதலீட்டாளர்களிடம் இருந்து மாத்திரம் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) கூட்டு முயற்சி வழங்கல்களுக்காக கொள்வனவு விலையில் 6 சதவீத இலாப வீதம் சேர்க்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் வழங்கப்படுவதாக கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் அது அவ்வாறு இல்லாதிருந்தமை உடன்படிக்கை செய்யப்பட்ட முதலீட்டாளருக்கு 2022 இன் முதல் அரையாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 17 மருந்து விடயங்கள் தொடர்பான விடயங்களில் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கிடையே ரூபா 14,979,403.47 பெறுமதியான 02 மருந்து விடயங்கள் பட்டியல் விலையில் அண்ணளவாக 17 சதவீதம் சேவைக் கட்டணம் அதாவது ரூபா 2,490,749.53 உழைத்து அவை மருந்து வழங்கல் பிரிவில் ரூபா 17,470,153 விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் கூட்டுமுயற்சி கொள்வனவுகள் தொடர்பான இலாப கொள்கையான 6 சதவீத இலாபத்தை விஞ்சி 11 சதவீத இலாப வீதத்தின் அடிப்படையில் அந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இந்த விடயத்திற்காக உற்பத்தியாளரினால் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கிரய பத்திரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட இருப்பின் மொத்த உற்பத்தி கிரயம் ரூபா 9,037,401.68 ஆக இருந்ததுடன், கூட்டு முயற்சி அதில் 65 சதவீதத்திற்கும் 66 சதவீதத்திற்கும் இடையிலான அதிக இலாப சதவீதத்தை உழைத்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கு இடையே 13 இற்குரிய பட்டியல்களில் ரூபா 65,962,584.37 ஆக இருந்ததுடன், 17-26 சதவீத்திற்கு இடையிலான சேவைக் கட்டணமான ரூபா 11,058,498.03 சேர்க்கப்பட்டு அது மருந்து வழங்கல் பிரிவிற்கு ரூபா 77,021,082 தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 6 சதவீத இலாப வீதத்தை விஞ்சி 11-26 சதவீத்திற்கு இடையிலான அதிக இலாப சதவீதம் உழைக்கப்பட்டிருந்தது. உற்பத்தியாளரின் கிரய பத்திரத்தின் பிரகாரம் அந்த மருந்துகளின் கிரயம் ரூபா 69,934,852 ஆக இருந்ததுடன், கூட்டு முயற்சி 2 சதவீதம் முதல் 17 சதவீதத்திற்கு இடையிலான இலாப சதவீதத்தை உழைத்திருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கிரய பத்திரங்களின் சரியான தன்மை தொடர்பாக கூட்டுத்தாபனத்தால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(iii) கூட்டு முயற்சி முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவினால் (Official committee) பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் முதலீட்டாளர்களின் உற்பத்தி செயற்பாடுகளின் தரக் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி கூட்டுத்தாபனத்தால் வழங்க வேண்டியிருந்ததுடன், அதற்காக அந்த முயற்சியின் பங்குகளில் 10 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்படல் வேண்டும். எனினும், ஏழு முதலீட்டாளர்களினால் மாத்திரம் பங்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்ட முதலீட்டாளரான Medi Com (Pvt)Ltd. இனால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தமது பங்குகளில் 10 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பெயர் குறிப்பிட்ட நிறுவனங்களான Sands Active (Pvt) Ltd. மற்றும் Yaden Laboratories (Pvt) Ltd. போன்ற இரண்டு நிறுவனங்கள் SPMC

வியாபார பெயரின் கீழ் தற்போது வரையிலும் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(v) 04 கூட்டு முயற்சிகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய 10% பங்கு உரித்துக்கு உரிய பங்குச் சான்றிதழ் Premium International (Pvt) Ltd, Sands Active (Pvt) Ltd, Synergy Pharmaceuticals Corporation (Pvt) Ltd மற்றும் Yaden Laboratories (Pvt) Ltd என்பவற்றிடமிருந்து கிடைத்திருந்ததுடன், Sands Active (Pvt) Ltd. மற்றும் Yaden Laboratories (Pvt) Ltd ஆகிய இரண்டு வியாபாரங்களில் இருந்து மாத்திரம் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் கூட்டுத்தாபனம் மருந்துகளை கொள்வனவு செய்திருந்தது.

(உ) நாட்டில் காணப்படுகின்ற மருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரேயொரு உற்பத்தி நிறுவனமான இலங்கை அரசாங்க மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகளுக்கான கோரிக்கையின் அடிப்படையில் அந்த உற்பத்தியின் அளவை அதிகரிப்பதற்காக மேற்கூறப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வசதிகள் போதியளவாக இல்லாமையின் அடிப்படையில் ஹொரணை மில்லேவ பிரதேசத்தில் புதிய உற்பத்திக்கூடமொன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தினால் நாட்டிற்கும், மக்களுக்கும் தேவையான மருந்துகள், ஏனைய மருத்துவ பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நாட்டிற்குக் கொண்டு வருதல் (இறக்குமதி) என்பவற்றிற்காக கவனத்திற் கொள்ளக்கூடிய வெளிநாட்டு நிதி சதவீதமொன்றை செலவிடுவதற்கும் அவ்வாறு நேரடியாக வெளிநாட்டு முதலீட்டினை கவர்வதற்கும், ஏற்றுமதியின் மூலம் அந்நிய செலாவணியை உழைப்பதற்கும் மற்றும் இறக்குமதி மாதிரிகளின் மூலம் அந்நிய செலாவணியை சேமிப்பதற்கும் முடியுமான வகையில் இலங்கைக்கு பொருளாதார நலன்களை கொண்டுவரக்கூடிய வகையில் தொழிற்சாலையாக மருந்து உற்பத்திக் கைத்தொழிலை அறிமுகப்படுத்துதலின் மூலம் புதிய மருந்து உற்பத்திக் கூடமொன்றை உருவாக்கி அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் இயலளவை அதிகரிப்பதற்கு லோட்டஸ் பாமா (Lotos Pharma) செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு 2021 மார்ச் 08 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் இதற்காக ஹொரணை மில்லேவத்த பிரதேசத்தில் 65 ஏக்கருக்கு அண்ணளவான காணி பிரதெசமொன்று ரூபா 322.4 மில்லியன் கிரயத்தில் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 03 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2022.12.31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு அண்ணளவாக ரூபா 354.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றாமையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட பிரகாரம் நாட்டிற்கும், தேசத்திற்கும் சிறந்த சேவை போன்ற செயற்திட்டத்திற்காக முன்னுரிமை வழங்கி விரைவுபடுத்துவதற்கு சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேசிய தேவையாக எழுந்துள்ள இந்த செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து நாட்டிற்குத் தேவையான நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையும், ஏனைய பொறுப்புவாய்ந்த தரப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

(ஊ) பூர்த்தி மருந்து இருப்புக்களை களஞ்சியப்படுத்துவதற்கு இரண்டு மாடி களஞ்சிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக 2018 செப்டெம்பர் 21 ஆம் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த நிர்மாணங்களுக்காக ரூபா 44,739,833 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரையில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிர்மாணங்கள் தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தது. மேலும் ஒப்பந்தகாரரால் ஒப்பந்த உடன்படிக்கை மீறப்படுமாயின் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ஐந்து சதவீதத்திற்கு குறையாத தொகை செயலாற்றல் காப்பீடாக பெறவேண்டியிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 வேலை: (ஆ) இன் பிரகாரம் அந்த வேலையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதியில் அவர்களுக்கு 28 நாட்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும். எனினும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயலாற்றல் காப்பீடு 2022 செப்டெம்பர் 04 ஆம் திகதியின் பின்னர் காலாவதியாகியிருந்தது. கணக்காய்வு திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த இந்த ஒப்பந்தத்தின் செயலாற்றல் காப்பீடும் முற்பண செலுத்துதல் பிணை முறியையும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு ஆலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(எ) கூட்டுத்தாபனத்தின் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளபடுகின்றன.

(i) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 427 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 323 ஆகும். 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் உற்பத்தி செயற்பாடுகளில் மிகவும் முக்கிய பிரிவான மருந்துப்பொருள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுகளினதும் தரக்கட்டுப்பாட்டு பிரிவினதும் பிரதான 02 பதவிகளை உள்ளடக்கிய முக்கியமான சில பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட 08 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 2023 மே 25 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்த்து.

(ஏ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கிரயம் ரூபா 21,962,722 ஆன 82 விடயங்கள் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மெய்யாய்விற்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன், இந்த விடயங்கள் பற்றாக்குறையாகவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிலையான சொத்துக்களை இனங்காணும் போது எந்த வகையிலான சொத்தொன்று நிலையான சொத்தாக இனங்காண வேண்டும் என்பது தொடர்பான கொள்கையொன்று கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை.

(ஒ) மூலப் பொருட்களை வழங்கியதற்காக 04 கூட்டு முயற்சி வியாபாரங்களுக்காக மற்றும் Kelun Lifesciences Pvt Ltd இற்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,593,491,982.74 ஆக இருந்ததுடன், அதனிடையே ரூபா 2,080,068,385.28 தொகை அதாவது 58 சதவீத அளவான அங்கீகரிக்கப்பட்ட கடனை செலுத்துவதற்காக அவகாசம் வழங்கப்பட்ட 50 நாள் காலத்தை விஞ்சியிருந்தது.

(ஓ) அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மருந்துகளுக்காக ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக கிடைக்க வேண்டிய மீதியான ரூபா 14,030,172 பெறுமதி ஒன்று மே 29 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஔ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் இருவரின் மீதி, நேர் மீதிகளை உறுதிப்படுத்தும் மீதிகளுடன் இணக்கம் செய்யப்படாதிருந்ததுடன், கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,285,995 இனால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2022 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துக்கள்

**2.2.2**

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பாக தொழில் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் குறித்து தொழில் ஆணையாளரின் அறிவுறுத்தல்கள் எழுத்துப்பூர்வமாக பெறப்பட்டுள்ளன.

(ஆ) வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல சந்தர்ப்பங்களின் போது விண்ணப்பங்கள் கோரப்படடுள்ளன. (2018.10.04, 2019.02.24, 2019.09.08, 2020.09.20, 2021.12.12 ஆம் திகதிகளில்)

ஆனால் பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரர் முன்வந்திருக்கவில்லை. தற்போது ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் (PED) அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருட்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக பிரதி முகாமையாளர் பதவிக்கு பதில் கடமை புரிவதற்கான அதிகாரியொருவர் அவசியம் என்பதால் அப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும் வரை முகாமையாளர்- பொருட்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பதவியை மேற்கொள்வதறகு அதிகாரியொருவரை நியமிக்க வேண்டியேற்பட்டது.

(இ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இடர்க்கடன்களுக்கான கொடப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஈ) தபாலில் அனுப்பப்படுகின்ற சகல காசோலைகள் தொடர்பான விபரங்களும் அடங்கிய பதிவேடொன்று தற்போது கணனியில் பேணிச் செல்லப்படுவதுடன் அது தேவைப்பட்டால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட முடியும் .

(உ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், குறித்த ஆண்டில் தொழிற்சாலையின் உற்பத்தி மற்றும் விற்பனையின் அதிகபட்ச கொள்ளளவை எட்டுவதைக் கருத்தில் கொண்டு, ஊழியர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் இந்த விசேட போனஸ் கொடுப்பனவு வழங்கப்பட்டது. மேலும், இதன் மூலம், உற்பத்தித் திறனை உயர் மட்டத்தில் பராமரிக்க முடியுமென்பதுடன் இதன் மூலம், அரச மருத்துவமனைகளின் மருந்து தேவைகளை தொடர்ந்து வழங்க முடியும்.

(ஊ) (i). (i). பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின்

அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருகை ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டன.

(ii) இக்கொடுப்பனவு தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2022.12.21 வெளியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PES/08/2022 எனும் சுற்றறிக்கையின்படி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ii) பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நத்தார் பரிசு உறுதிச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(iii) பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேவை தடவைகள் படிகளுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(எ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் 2022.01.25 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022.01.25 அன்று, அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் துவிச்சக்கர வண்டி கடன்களுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.3** குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, 2023 ஆம் ஆண்டு முதல் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.4**

(அ) பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை பெறுகை கோவைகளில் உள்ளடக்கப்படாத போதிலும் பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட முறையில் பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை பெறுகை கோவைகளில் உள்ளடக்கி தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) 2020 ஆம் ஆண்டில், Covid-19 இன் தொற்றுநோய் மிகவும் தீவிரமாக பரவியதுடன் Chloroquine Phosphate BP 250mg என்ற மருந்தை உலகம் முழுவதும் Covid-19 தொற்றுநோய்க்கு பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. அப்போது எங்களிடம் இருந்த Chloroquine Phosphate மருந்தைப் பயன்படுத்தி மிகக் குறுகிய காலத்திற்குள் ஐந்து மில்லியன் Chloroquine Phosphate BP

250mg மாத்திரைகளை தயாரித்து நாட்டுத் தேவைகளுக்குப் பயன்படும் வகையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்கு முடிந்தது.

Covid-19 தொற்றுநோய்க்கு Chloroquine Phosphate மருந்தைப் பயன்படுத்துவதற்கான பரிந்துரையுடன், உலக சந்தையில் இந்த Chloroquine Phosphate மூலப்பொருளுக்கான தேவை மிகவும் அதிகரித்தமை மற்றும் இலங்கை மக்களுக்கு இந்த மருந்தை வழங்கும் பொறுப்பு எங்கள் நிறுவனத்திற்கு உள்ளது என்ற நம்பிக்கையுடன் மருத்துவ வழங்கல் பிரிவின் அறிவுறுத்தலின்படி, 600 kg அளவொன்றை விரைவில் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செயயப்பட்டது.அக்காலகட்டத்தில் ஆபத்தான தொற்றுநோய் சூழ்நிலையில் இருந்து இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு இந்த மருந்து பயன்படுத்தப்படாததால், இந்த கையிருப்பை பயன்படுத்த முடியவில்லை.

இந்தப் கையிருப்பை மறு-ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறியுமாறு IPCA Laboratories – India ( 19/01/2021, 27/02/2023) எனும் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந்த கையிருப்பு அல்லது அதன் தயாரிப்புகளை United Nations Children Fund – Thailand (29/06/2020) இற்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறியுமாறும் கோரப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூர் அல்லது வெளிநாட்டுத் தரப்பினருக்குத் தேவைப்பட்டால், தயாரிக்கப்பட்ட மருந்துகள் அல்லது மூலப்பொருட்களின் இந்த இருப்பை அவர்களை தொடர்பு கொண்டு வழங்குமாறு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரிடம் (சுகாதார சேவைகள்) கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளனதுடன் கஷ்டப்பட்ட நாடான பிஜி தீவுகளுக்கு மானியமாக வழங்குவதற்கான சாத்தியம் குறித்து ஆராயப்படுவதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அதற்கான ஒருங்கிணைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) இந்த வெற்று வில்லைகள் மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைத்த Cloxacillin Sodium BP 250mg கட்டளைக்காக கொள்வனவு செய்யப்பட்டன. எனவே, மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்கேற்ப இந்த வில்லைகளில் "DHS" அச்சிடப்படுகிறது. மீதமுள்ள 5.125 மில்லியன் வெற்று வில்லைகளை வீணாக்காமல் பயன்படுததுவதற்கு மருத்துவ வழங்கல் பிரிவின் கடைசி முயற்சிக்கு நல்ல பதிலொன்று கிடைக்கவில்லை.

DHS முத்திரை இடப்பட்டமையால் வெற்று மாத்திரை இருப்பை திறந்த சந்தைக்காக Cloxacillin Sodium BP 250mg உற்பத்திசெய்து பயன்படுத்த முடியாமையின் காரணமாக இந்த இருப்பு காலாவதியாகும் வரை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. தற்போது காலாவதியாகி உள்ளமையால் எதிர்காலத்தில் முறையான பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ்வாறான இழப்புகளை தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்த சம்பவத்தின் பின்னர் DHS முத்திரை இடப்பட்ட வெற்று மாத்திரை கட்டளை இடல் மேற்கொள்ளப்படுவதில்லை.

**2.3**

(அ)

(i) உரிய செயல் நடவடிக்கைத்திட்டம் 2023.07.20 அன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(ii) மூலோபாயத் திட்டம் 2023.07.20 அன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு வரிசை அமைச்சின் செயலாளர் மூலம் பொது முயற்சிகள் பணிப்பாளரின் நாயகத்தின் அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஆ)

**(i)** மாதாந்த உற்பத்தித் திட்டத்தின்படி, 2022ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **மாதம்** | **எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு (மில்லியன்)** | **அடையப்பட்ட வெளியீடு (மில்லியன்)** | **சதவீதம் %** |
|---|---|---|---|
| சனவரி | 280.8905 | 226.382 | 80.6 |
| பெப்ரவரி | 263.9055 | 253.642 | 96.1 |
| மார்ச் | 279.89 | 330.727 | 118.2 |
| ஏப்ரல் | 245.275 | 209.864 | 85.6 |
| மே | 288.49 | 263.244 | 91.2 |
| யூன் | 299.644 | 316.531 | 105.6 |
| யூலை | 313.288 | 324.5 | 103.6 |
| ஆகஸ்ட் | 296.629 | 274.593 | 92.6 |
| செப்டெம்பர் | 245.57 | 251.629 | 102.5 |
| ஒக்டோபர் | 247.94 | 305.074 | 123.0 |
| நவம்பர் | 351.42 | 350.886 | 99.8 |
| திசெம்பர் | 256.806 | 195.883 | 76.3 |

இதில் அநேகமான மாதங்களில் ±%10 சதவீதத்தில் ஆண்டின் 09 மாதங்களில் இலக்கு அடையப்பட்டுள்ளது. ± 25% இல் சகல மாதங்களிலும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ வழங்கல் பிரிவின் கோரிக்கைகளுக்கு ஈடுசெய்யும் வகையில் கூட்டுத்தாபனத்தின் மருந்து உற்பத்தி போதியளவாக இருந்த போதிலும், சில மருந்துகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் ஒட்டுமொத்த கோரிக்கையையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

இந்த மருந்துகள் அனைத்தும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்க வேண்டியஅ ளவை விட அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனினும் அப்போது நாட்டுச் சந்தையில் மருந்துகள் தட்டுப்பாடு நிலவியதால் திட்டமிட்டதை விட கூடுதல் மருந்துகளை தனியார் சந்தைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளின் அளவுடன் ஒப்பிடுகையில் மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைகள் மற்றும் உற்பத்தி அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மருந்து | உற்பத்தி அளவு (மில்லியன்) | கட்டளை அளவு (ம.வ.பி.) (மில்லியன்) |
|---|---|---|
| Ascorbic Acid | 144.50 | 100.00 |
| Ciprofloxacine | 1.80 | 4.00 |
| Domperidone | 58.10 | 58.00 |
| Famotidine | 102.63 | 52.00 |
| Gliclazide 80 mg | 297.00 | 240.00 |
| Indometacine | 5.00 | 2.00 |
| Metformine 500 mg | 72.84 | 50.00 |
| Paracetamol 500 mg | 523.00 | 325.00 |
| Trifluperazine | 13.50 | 5.05 |
| Theophylline 125 mg SR | 13.65 | 12.00 |

**(ii)**. 2021 ஆம் ஆண்டில், நிறுவனம் 3043.5 மில்லியன் மாத்திரைகள் மற்றும் வில்லைகளை உற்பத்தி செய்ததுடன் 2022 ஆம் ஆண்டில் இந்த மாத்திரை மற்றும் வில்லை அலகுகள் 3302.1 மில்லியன் வரை உயர்வடைந்திருந்தது.

மேலும், 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, முன்னறிவிக்கப்பட்ட உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டங்களில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. SPMC பொதுவாக அதன் மொத்த உற்பத்தியில் 25% தனியார் சந்தைக்கும் 75% மருத்துவ வழங்கல் பிரிவிற்கும் வழங்குகிறது. மேலும், 2022 ஆம் ஆண்டில், மீண்டும் Covid வைரஸ் வளர்ச்சியின் காரணமாக, நிறுவனம் சந்தைத் தேவைக்கு ஏற்ப மருந்துகளை வழங்க வேண்டியிருந்தது. எனவே, Paracetamol 500 mg போன்ற மருந்துகள் திட்டமிட்டதை விட கணிசமாக அதிக அளவில் தனியார் சந்தைக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. நிறுவனத்தின் மருந்து உற்பத்தி அதன் அதிகபட்ச திறனில் இருப்பதால், சில மருந்துகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், வேறு சில மருந்துகள் குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் Covid தொற்றுநோய் காரணமாக, உற்பத்தித் திட்டத்திற்கு வெளியே மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது. இது ஒரு மதிப்பிட முடியாத சூழலாக கருதப்பட முடியுமென்பதுடன் சந்தையில் மருந்துகளின் தேவை ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அடிக்கடி முரண்படுகின்றது. மேலும், மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய தேவையான வெளிநாட்டு நாணயம் இல்லாததால், அவ்வப்போது தடங்கல் ஏற்பட்டது. எனவே, அத்தகைய சூழலில் முழுமையான திட்டத்தைப் பின்பற்றுவது மிகவும் கடினம். ஆனால் மாதாந்த திட்டங்களில் அதிக சதவீதம் எப்போதும் முடிக்கப்படுகின்றது. மாதாந்த திட்டமிடப்பட்ட மொத்த மருந்துகளின் அளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த அளவுகள் மேலே (ஆ) இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**(iii).** SPMC உடன் கூட்டு முயற்சி 2017 ஆம் ஆண்டின் இறுதியின் போதே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது அமைச்சரவை அங்கீகாரம் 15 பேர்களுக்காக கிடைத்திருந்த போதும் அதில் 2017 ஆம் ஆண்டில் ஒரு கூட்டு முயற்சியும், 2018 ஆம் ஆண்டில் 02 கூட்டு முயற்சிகளும் SPMC Logo இன் கீழ் மருந்துகளை வழங்கியிருந்தன.

தற்போது 06 கூட்டு முயற்சிகள் SPMC Logo இன் கீழ் மருந்துகளை வழங்குகின்றன.

SPMC மூலம் மாத்திரை மற்றும் வில்லைகளும்
Celogen Lanka Pvt. Ltd. மூலம் மாத்திரை மற்றும் வில்லைகளும்
Diyatha Pharmaceuticals Pvt Ltd மூலம் கிறீம் மற்றும் திரவங்களும்
Glosanthe Pvt. Ltd மூலம் பெண்டேஜ் வகைகளும்
Kelun LifeSciences மூலம் வெளியேற்றத் தீர்வுகள் மற்றும் ஊசிகளும் (Saline, Dextrose போன்ற)
Yaden Laborataries Pvt. Ltd மூலம் ஊசிகளும் (Injections)
Medicom Pvt Ltd மூலம் கிரமிநாசினி தீர்வுகளும்
உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கு, உற்பத்தி திறன் இல்லாத மற்றும் SPMC இல் உற்பத்தி செய்யப்படாத பொருட்கள் மட்டுமே இந்த கூட்டு முயற்சிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் கடந்த வருடத்தில் அதிகரித்திருந்த போதிலும் தற்போது அது உகந்த மட்டத்தில் உள்ளது.

| | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|
| SPMC உற்பத்தி அலகு (மில்லியன்) | 3015 | 3040 | 3303 |

தற்போதுள்ள உற்பத்தி திறனை மேலும் அதிகரிக்கும் வகையில் எமது கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவை வேறு இடத்துக்கு மாற்றி, அந்த கட்டிடத்தில் உற்பத்தி பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மேலும், 2023 ஆம் ஆண்டில், Sands Active மூலம் மாத்திரைகள் மற்றும் வில்லைகள் தயாரிப்புகள் வழங்கப்பட உள்ளன, மேலும் 2024 ஆம் ஆண்டில், Sands Active மூலம் Cephelesporine மருந்துகள் மற்றும் இன்சுலின் மருந்துகளை வழங்குவதற்கு உள்ளதுடன் அதன் பிரகாரம் கூட்டு முயற்சிகள் மூலம் விற்பனை வருமானம் மேலும் அதிகரிக்கும்.

**(iv).** கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகவர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட SPMC மருந்துகளை விற்பனையின்போது அவற்றின் கிரயப் பகுப்பாய்வு சராசரியாக வருடத்திற்கு ஒரு தடவை

மாத்திரமே செய்யப்பட்டிருந்ததுடன், அந்த சந்தர்ப்பத்தின் போது காணப்படுகின்ற கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு SPMC உற்பத்திகள் விலை திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த ஆண்டு முழுவதும் நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார நிலை காரணமாக, மூலப்பொருட்கள் மற்றும் இதர பொதியிடல் பொருட்களின் விலை தொடர்ந்தும் ஏற்ற இறக்கமாக இருந்தது. அவ்வாறு தொடர்ந்து விலையேற்றம் காரணமாக சில மருந்துகளின் அலகு விலை அதிகரித்தாலும், அச்சந்தர்ப்பத்தில் களஞ்சிய இருப்பு பூஜ்ஜியம் ஆக இருக்கும் வரை (அதாவது முந்தைய விலையில் பொதி செய்யப்பட்டது) எங்களுக்கு விலை திருத்தங்களைச் செய்வதற்கு நடைமுறையில் முடியாதிருந்தது. இதுபோன்ற விலை ஏற்ற இறக்கங்கள் இருக்கும் சந்தர்ப்பங்களில், மருந்துகளின் விலையை மறுபரிசீலனை செய்வது அவசியம் என்றாலும், தற்போதுள்ள கையிருப்பு பூஜ்ஜியமாக இருக்கும் வரை விலையை அதிகரிக்க முடியாது. எவ்வாறாயினும், ஒவ்வொரு விலைத் திருத்தத்திலும் இந்தத் தயாரிப்புகளுக்கான போட்டிச் சந்தை விலைகளும் எம்மால் கருத்திற் கொள்ளப்படுகின்றது.

**(v).** சில உற்பத்திகளின் விலை எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளும் போது அந்த உற்பத்திகளின் கிரயத்தை கருதும் இடத்து உயர்ந்த இலாப விகிதத்தை காட்டியிருந்த போதிலும், இந்த உற்பத்திக்கான ஏனைய போட்டி உற்பத்தியாளர்களின் சந்தை விலை உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தமையால் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலை எண்ணிக்கையில் மருந்துகளை கொள்வனவு செய்தல் நுகர்வோருக்கு நலனாக இருந்தமை. மேலும், அனைத்து SPMC தயாரிப்புகளின் விலையும் சில சந்தர்ப்பங்களில் ஈடுசெய்யப்படாததால், இதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பைக் குறைக்கவும் முடியும்.

(இ)

(i) தற்போது அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் JICA செயற்திட்டம் ஊடாக இரண்டாவது தடவையாக உற்பத்திக்கூட வசதிகளை விரிவுபடுத்தி உள்ளதுடன், ஊழியர்களின் ஆகக் கூடிய அர்ப்பணிப்பின் அடிப்படையிலும், புதிய உற்பத்திகளை சந்தைக்கு விநியோகிப்பதன் ஊடாக தற்போது உற்பத்திக்கூடத்தில் உச்ச உற்பத்தி இயலளவை அடைந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இதனால், போதிய உற்பத்தி திறன், உற்பத்தி வசதிகள், மூலப்பொருட்களை சரியான நேரத்தில் பெற இயலாமை மற்றும் தற்போதுள்ள தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக, உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் அளவு சந்தை தேவையை பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. எனவே, அதன் பிரதிபலிப்பாக, SPMC இரண்டாம் கட்டமாக ஹொரண மில்லவ பிரதேசத்தில் SPMC புதிய உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு தயாராகி வருவதுடன், பொது மாத்திரைகள் மற்றும் வில்லைகள் உற்பத்திக்கான உற்பத்தி நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன தொழில்நுட்பத்துடன் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ii) கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(iii) குறிப்பிட்ட விலைப்பட்டியல்களுக்கான காசோலைகள் வைப்புச் செய்யப்படுவதற்கு முன்பு அவர்களுக்கு தள்ளுபடிகள் வழங்கப்படும். எனவே, தள்ளுபடி வழங்கப்பட்ட பின்னரே அவர்களின் காசோலைகள் மதிப்பிழந்திருந்ததை நாம் அறிவோம். எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைத்த கட்டளை மற்றும் சந்தையின் கோரிக்கையின் பிரகாரம் இந்த விடயங்களில் உள்ளபடியான விற்பனை அளவு அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் முரண்பாடாகி இருந்தது.

மேலும், Ferrus Fumarate 182.4mg மற்றும் Ferrus Fumarate 90.2mg மருந்துகளுக்கு குடும்ப நலப் பணியகத்தின் தேவையின் பேரில் ஆண்டின் நடுப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளை செய்யப்பட்டதால் இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சந்தைப்படுத்தல் திட்டத்தில் குறிப்பிடப்படாத பிற பொருட்கள் 2022 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்களாகும்.

பொருளாதார நெருக்கடி மற்றும் 2022 ஆம் ஆண்டில் Covid-19 தொற்றுநோய் காரணமாக, மருந்து இறக்குமதியில் சிக்கல்கள் ஏற்பட்டன. எனவே உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு முன்னர் திட்டமிடப்பட்ட இந்த மருந்துகளின் திட்டங்களும் அனுமதிகளும் வினைத்திறனாக்கப்பட்டு சுகாதார அமைச்சின் தலையீட்டின் கீழ் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருந்துகளில் பெரும்பாலானவை கண்டி பல்லேகலவில் புதிதாக நிறுவப்பட்ட உற்பத்தி ஆலையின் மருந்துகளாகும்.

உதா:- டெங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற Dextran 40, 10%, in Nacl for IV use 500ml

- இரத்தத்தில் சர்க்கரையை குறைகப்பதற்க வழங்கப்படுகின்ற Dextrose for IV use 25%, 25ml, Dextrose Injection 5%, 500ml, Dextrose for IV use 50%, 20ml-50ml

- ஊசியைக் கரைக்கப் பயன்படுத்தப்படுகின்ற Water for Injection 10ml vial

போன்ற அத்தியாவசிய மருந்துகள் அவற்றில் அடங்கும். இந்த மருந்துகள் அனைத்தும் SPMC இலச்சினையின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை வரலாற்றில் இவ்வாறு வெளியேற்றும் கரைசல்கள் தயாரிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். உலகளாவிய நெருக்கடியின் போது இந்த தயாரிப்புகளை வழங்க முடிந்தது SPMC இற்கு ஒரு பெரிய சாதனை ஆகும்.

அத்துடன் இந்த மருந்துகளின் இறக்குமதியை முற்றாக நிறுத்தி இந்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவதுடன் மக்களுக்கு தேவையான மருந்துகளை உரிய நேரத்தில் வழங்கவும் முடிந்துள்ளது.

மேலும், இதுபோன்ற தொழிற்சாலைகளை நாட்டில் நிறுவுவதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும், புதிய தொழில்நுட்பம் கிடைக்கும், பல்கலைக்கழக மாணவர்கள் புதிய தொழில்நுட்பப் பயிற்சி பெறும் வாய்ப்பும் ஏற்படுவதால் (ஏற்கனவே பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் இங்கு கல்வி பயின்று வருகின்றனர்) நாட்டின் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும்.

மேலும், EUGMP நிபந்தனைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த உற்பத்தி ஆலையின் உற்பத்திப் பொருட்களை நிறைவு செய்த பின்னர் மீதமுள்ளவை இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும்.

(v) மூலப் பொருள் விலைகள் உயர்ந்து சென்றமையின் காரணமாக விலை எண்ணிக்கையை உயர்த்த வேண்டி ஏற்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 203.00 இற்கு காணப்பட்ட டொலர் விரைவாக அதிகரித்து ரூபா 380.00 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக எங்களுக்கு அதிக விலையொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது, இவ்வாறு டொலர் அதிகரித்தமையால் NMRA மூலம் பல சந்தர்ப்பங்களின் போது இந்த உற்பத்தியாளர்களின் ஆகக் கூடிய சில்லறை விலையை உயர்த்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதே சமயம், சுகாதாரச் செயலாளரின் பங்கேற்புடன் விலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விலைகளின்படி எங்கள் தயாரிப்புகள் விற்கப்பட்டன.

(vi) மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் விநியோகிப்பவர்களுக்காக வழங்கப்பட்ட ஆகக் குறைந்த மாதாந்த விற்பனை இலக்கு ரூபா இரண்டு மில்லியன் ஆக இருந்த போதும் அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் வரையறுக்கப்பட்ட உற்பத்தி வசதிகளின் காரணமாக உற்பத்தியின் போது MSD கட்டளைக்காக முன்னுரிமை வழங்கப்பட்டமையால் திறந்த சந்தை கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக விற்பனை பிரிவிற்கு மிகவும் வரையறுக்கப்பட்ட இருப்பு அளவு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. எனவே பல விநியோகஸ்தர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட விற்பனை இலக்கை அடைவது நடைமுறையில் கடினமாகிறது. எனவே, பல சந்தர்ப்பங்களில், முக்கிய விற்பனை பிரதிநிதிகள் மட்டுமே தங்கள் விற்பனை இலக்கை

அடைந்தனர், மேலும் அவர்கள் தங்கள் இலக்கை அடைவது இப்போது மிகவும் கடினமாக உள்ளது.

(vii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 07652 மற்றும் 08366 ஆகிய எண்களைக் கொண்ட இரண்டு விலைப்பட்டியல் சரிபார்த்து கையொப்பமிடப்படவில்லை மற்றும் விற்பனைப் பிரிவில் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள் இருந்தமையால் விலைப்பட்டியல்களை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. இப்பிரச்சினை குறித்து, கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுப் பிரிவிற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விலைப்பட்டியல் எண் 08016 மற்றும் 08017 ஆகிய இரண்டும் எங்கள் தவறு காரணமாக அங்கீகரிக்கப்பட முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இதை தவிரப்பதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ)

(i) இந்த 15 முதலீட்டாளர்களிடம் இருந்தும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்குவதற்கு உற்பத்திக்கூட வசதிகள் மற்றும் தகைமைகளை அடைந்திருந்தமை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முதலீட்டாளர்கள் மாத்திரமே ஆகும்.

1. Diyatha Pharmaceuticals & Healthcare (Pvt) Ltd.
2. Glosante (Pvt) Ltd.
3. Celogen Lanka (Pvt) Ltd.
4. Mediccom (Pvt) Ltd.
5. Sands Active (Pvt) Ltd. (2023 எப்ரல் மாதம் முதல்)
6. Yaden Laboratories (Pvt) Ltd. (2022 திசெம்பர் மாதம் முதல்)

(ii) (a) உரிய 2 விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் மருந்தது வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யும் போது 2020.10.01 ஆம் திகதி காணப்பட்ட விலை குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரமே கவனத்தில் கொள்ளப்பட்டது. எனினும் உரிய கூட்டு முயற்சியாளர்கள் தமது விடயங்களை பட்டியல் இட்டு 2020.02.06 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற விலை குழுவின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. அங்கு, 2020.10.01 அன்று அங்கீகரிக்கப்பட்ட விலைகளை விட குறைந்த விலைகள் 2020.02.06 மற்றும் 10 ஆகிய திகதிகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையால், அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் புதிய விலையில் விலைப்பட்டியல் சமர்ப்பித்தும், அதுதொடர்பான கூட்டுமுயற்சி வியாபாரம் பழைய விலையில் விலைப்பட்டியலை சமர்ப்பிப்பதால் இவ்வாறான நிலைமையொன்று காணப்படுகின்றது.

இங்கு, அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் அமைச்சரவை அங்கீகாரத்தடன் முடிவு செய்யப்பட்ட விலை நிர்ணயத்தை, அமுல்படுத்த வேண்டும்.அதேபோல், தனியார் தொழிலாக செயற்படும் கூட்டுமுயற்சி நிறுவனங்களுக்கு இங்கு அதிக வருமானமோ, இலாபமோ இல்லாததுடன் அரசுக்கு அதிக அனுகூலம் கிடைக்கும் என்று கூறலாம்.

(b) உரிய 17 மருந்து விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யும் போது 2021.10.05 ஆம் திகதி காணப்பட்ட விலைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், உரிய கூட்டு முயற்சி மூலம் பட்டியல்கள் 2021.04.05 ஆம் திகதி நடைபெற்ற விலைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் காணப்பட்ட விலை எண்ணிக்கையில் படடியல் தயாரிக்கப்பட்டிருந்தது.2021.10.05 அன்று விலைக் குழுக்களை நடத்துவதற்கு முன்னர் அவர்கள் சம்பந்தப்பட்ட பொருட்களுடன் விலைப்பட்டியல் தயாரித்துள்ளதால், 2021.04.05 அன்று விலைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விலைத் தாள்களின்படி, விலைப்பட்டியல்களில் விலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையின் அடிப்படையில், அரச மருநதாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் அதிக இலாபம் ஈட்டியுள்ளது.

இந்நிலையில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முடிவு செய்யப்பட்ட விலை நிர்ணயத்தை, மருநதாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் அமுல்படுத்த வேண்டும். அதேபோல், தனியார் தொழிலாக செயற்படும் கூட்டுமுயற்சி நிறுவனங்களுக்கு இங்கு அதிக வருமானமோ, இலாபமோ இல்லாததுடன் அரசுக்கு அதிக அனுகூலம் கிடைக்கும் என்று கூறலாம்.

(iii) Mediccom (Pvt) Ltd. நிறுவனத்தினால் பங்கு உரித்து சான்றிதழ் விநியோகிப்பதற்கு தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(iv) SPMC உடன் ஒப்பந்தத்தில் பங்குகளை வழங்கிய நிறுவனங்களுக்கு எமது நிறுவனத்தால் பணிப்பாளர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இதில் Sands Active (Pvt) Ltd. மற்றும் Yaden Laboratories (Pvt) Ltd ஆகிய இரண்டு நிறுவனங்களும் தற்போது SPMC இலச்சினையின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்குகின்றன.

மேலும் Premium International (Pvt) Ltd. நிறுவனத்தின் மூலம் எமக்கு பங்குகள் வழங்கப்பட்டமையால் எமது நிறுவனத்திலிருந்து ஒரு பணிப்பாளரை நியமித்துள்ளதுடன், அந்நிறுவனத்தில் தொழிற்சாலைகளைக் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய சூழ்நிலை கட்டுமானப் பணிகளுக்கு தடையாக இருந்தது. உற்பத்தி ஆலை கட்டப்பட்டு முடிந்தவுடன், அதன் தயாரிப்புகளை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(v) Sands Active (Pvt) Ltd. மற்றும; Yaden Laboratories (Pvt) Ltd. ஆகிய நிறுவனங்கள் இரண்டில் உற்பத்திக்கூட நிர்மாணித்தல் வேலைகள் மற்றும் NMRA சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் போன்ற வேலை நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் மருந்துகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் Premium International (Pvt) Ltd. மற்றும் Synergy Pharmaceuticals Corporation (Pvt) Ltd. ஆகிய நிறுவனங்கள் தற்போது தங்கள் தொழிற்சாலைகளை கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன. கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய சூழ்நிலை கட்டுமானப் பணிகளுக்கு தடையாக இருந்தது. உற்பத்தி ஆலை கட்டப்பட்டு முடிந்தவுடன், அதன் தயாரிப்புகளை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) திட்ட நிர்வாகக் குழுவிற்கான (Project Management Committee) திட்ட ஒருங்கிணைப்பாளர் (Project Co-Ordinator) தொடர்பான பதவிகளும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற திட்டங்களை மேற்கொள்ளும்போது சட்ட ஆலோசனை அவசியம். எனவே, அப்போது SPMC இற்கு நிரந்தர சட்டத்தரணி பதவி இல்லாததால், பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்துடன் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் SPMC இல் பணியாற்றிய சட்ட ஆலோசகர் (Legal Advisor) ஹொரண மில்லேவ Lotus Pharma திட்டத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் சட்ட ஆலோசனை செயற்பாடுகள் மற்றும் Lotus Pharma திட்டத்தின் சட்ட ஆலோசனை செயற்பாடுகள் ஆகிய இரண்டிற்கும் ஹொரண மில்லேவ சட்ட ஆலோசகரின் (Legal Advisor) சேவைகளை நாம் பெற்றுள்ளோம்.

அத்தகைய திட்டத்தில் திட்டச் செயலாளர் (Project Secretary) பதவியும் இன்றியமையாதது. எனவே, பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்துடன் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கும் முன்னெடுப்பதற்கும் ஒப்பந்த அடிப்படையில் திட்டச் செயலாளர் (Project Secretary) பதவியும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. இதன்படி, இந்த 3 பதவிகளுக்கும் [திட்ட ஒருங்கிணைப்பாளர் (Project Co-Ordinator), சட்ட ஆலோசகர் (Legal Advisor) மற்றும் திட்டச் செயலாளர் (Project Secretary)] தேசியத் தேவையாக உள்ள இந்த மருந்தாக்கல் உற்பத்தித் திட்டத்தின் வெற்றிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தேவையான பணிகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் உரிய பதவிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், மீள் அங்கீகாரத்திற்கான கடிதத்தை சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, உரிய அங்கீகாரத்தைக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஊ) பின்வரும் காரணங்களால் அடிப்படை ஒப்பந்தத்தின்படி 2019 ஆகஸ்ட் 21 இற்குள் இரண்டு மாடி களஞ்சியக் கட்டிடத்தை முடிப்பதற்கு முடியவில்லை.

a) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் எமது கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளின் முக்கிய கொள்வனவாளரான அரச மருத்துவ வழங்கல் பிரிவு (Medical Supplies Division) செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை (2018 outstanding balance -Rs. million 445.80 and 2019 outstanding balance -Rs. million 1,482.40) நிதி அமைச்சினால் வழங்கப்படுவதற்கு தாமதமான காரணத்தினால் எமது நிறுவனம் நிதி சிக்கலுக்கு உள்ளாகி இருந்தது. பின்வரும் கொடுப்பனவுகளைச் செய்வதில் ஏற்பட்ட தாமதமும் இத்திட்டத்தின் தாமதத்திற்கு ஒரு காரணமாகும்.

- ஒப்பந்த நிறுவனமான KSJ Construction Pvt Ltd நிறுவனத்திற்கு ஆரம்ப கொடுப்பனவாக ஒப்பந்த மதிப்பில் 20% முற்பணத் தொகை செலுத்துவதற்கு கணக்குப் பிரிவிற்கு 2018.05.18 அன்று சமர்ப்பிக்கப்பட்டும் மேற்படி காரணத்தால் 7 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2018.12.07 அம் திகதி பணம் செலுத்தப்பட்டது.
- முதல் பற்றுச்சீட்டு (Interim Payment No 1) 2019 ஜனவரி இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் கொடுப்பனவு சுமார் 6 மாதங்கள் தாமதமானது.

(எ)

(i) தொடர்புடைய முக்கிய பதவிகள் உட்பட ஏனைய அனைத்து பதவிகளுக்கும் தொடர்ந்து ஆட்சேர்ப்பு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் இந்த ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படுவதற்கு முனனர் பரீட்சித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் அந்த முன் பரீட்சித்தலுக்குப் பின்னர் எமக்கு தொடர்புடைய பதவிகளின் வரைவுகள் பெறப்பட்ட பின்னர் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு வரிசை அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

(ஏ) இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஐ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சகல சொத்து தொகுதிகளையும் இனங்காணும் சகல குறிகாட்டிகள் பரிந்துரை செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான கொள்கையொன்று 2023 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஒ) எமது நிறுவனத்தினால் தொடர்புடைய பொருட்களை வழங்கிய 50 நாட்களுக்குப் பிறகும், எமது நிறுவனம் திறைசேரியில் இருந்து பணத்தைப் பெறும் விதத்தின் அடிப்படையில் தொடர்புடைய கூட்டுமுயற்சி வணிகங்களுக்குப் பணம் செலுத்தப்படுவதே எமது நிறுவனத்தின் பணம் செலுத்தும் கொள்கையாகும். அதாவது எமது நிறுவனத்திற்கு திறைசேரியில் இருந்து பணம் கிடைக்காததால் கூட்டுமுயற்சி வணிகங்களுக்குப் பணம் செலுத்தவதற்கு முடியாதிருந்தது. எனவே, அவர்கள் பணம் செலுத்தும் காலம் 50 நாட்களுக்கு மேற்பட்டதாக இருக்கலாம்.

(ஓ) இது குறித்து, அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் தெரியப்படுத்தி உரிய நிலுவைத் தொகையை வசூலிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதால், அது மிக விரைவில் வசூலிக்கப்படும்.

(ஔ) கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு கடன் கொடுத்தோரின் 2022.12.31 இல் நிலுவைகள் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதங்களுக்கு இடையே எவ்வித வித்தியாசமும் இல்லை. அதற்கான காரணம் Jayasinghe Industries மற்றும் Macklarans Logistics Ltd. இன் உறுதிப்படுத்தப்பட்ட நிலுவைகள் சரியாகக் காட்டப்படவில்லை என்பதுடன் சரியான நிலுவைகளை மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டள்ளன. மேலும் Dinlanka Logistic மற்றும் Sri Lanka Insurance Corporation ஆகியவற்றால் செலுத்தப்படும் என குறிப்பிடப்படடுள்ள விலைப்பட்டியல்கள் இது வரையில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவில்லை.

# வரைபட மீள்நோக்கு



# வரைபட மீள்நோக்கு


விற்பனை புரள்வு
20,000
15,000
10,000
5,000
-
ரூ.மில்லியன்
1,941.1
1,712.1
2,054.3
2,434.5
3,174.6
4,621.5
5,646.8
7,647.7
8,538.9
16,620.1
2013
2014
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
ஆண்டு


விற்பனை உள்ளடக்கம
1 %
15 %
84 %
MSD
SPC
Distribution Channel


வரிக்கு முன் நிகர லாபம்
2,000
1,500
1,000
500
-
ரூ.மில்லியன்
329.96
266.48
414.50
441.16
321.98
359.68
592.05
1,160.99
1,235.33
1,586.22
2013
2014
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
ஆண்டு


உற்பத்தி
மில்லியன்
4,000
3,000
2,000
1,000
-
2,003
1,909
2,026
2,144
1,523
1,897
2,400
3,015
3,043
3,302
2013
2014
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
ஆண்டு


உற்பத்தியின் பிரதான பங்களிப்புகள் 2022
523.05
309.40
297.00
201.80
191.01
174.00
144.45
117.60
106.40
102.63
Paracetamol Tablets BP 500mg
Losartan Potassium Tablets 50mg
Gliclazide Tablets BP 80mg
Omeprazole Capsules IP 20 mg
Atorvastatin Tablets IP 10mg
Gliclazide Tablets BP 40mg
Ascorbic Acid Tablets BP 100mg
Salbutamol Tablets BP 2mg
Prednisolone Tablets BP 5mg
Famotidine Tablets BP 20mg


ஊழியர் எண்ணிக்கை
211
226
229
248
274
276
276
291
329
336
2013
2014
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
ஆண்டு

# கடந்த 10 ஆண்டுகளுக்கான நிதிச் சிறப்பம்சங்கள்

(Rs.000)

| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பணப்புரள்வு | 1,941,182 | 1,712,105 | 2,054,363 | 2,434,508 | 3,174,612 | 4,621,537 | 5,646,878 | 7,647,780 | 8,538,944 | 16,620,184 |
| விற்பனைச் செலவு | 1,513,899 | 1,319,715 | 1,539,441 | 1,888,256 | 2,666,683 | 3,990,801 | 4,743,125 | 6,280,757 | 7,102,322 | 14,559,044 |
| மொத்த இலாபம் | 427,283 | 392,391 | 514,921 | 546,252 | 507,928 | 630,736 | 903,752 | 1,367,023 | 1,436,621 | 2,061,140 |
| தொழிற்பாட்டு இலாபம் | 304,176 | 224,758 | 364,845 | 353,776 | 244,987 | 308,741 | 564,411 | 1,067,020 | 1,078,814 | 1,253,361 |
| நிர்வாக செலவு | 106,096 | 133,933 | 125,469 | 165,788 | 204,579 | 242,218 | 237,694 | 247,137 | 244,271 | 332,120 |
| வட்டி வருமானம் | 28,059 | 44,196 | 53,586 | 87,629 | 77,401 | 51,659 | 28,093 | 94,487 | 156,792 | 351,759 |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | 329,968 | 266,481 | 414,501 | 441,164 | 321,982 | 359,680 | 592,057 | 1,160,997 | 1,235,327 | 1,586,213 |
| வரிக்கு பின் தேறிய இலாபம் | 209,154 | 183,848 | 262,323 | 296,646 | 223,907 | 251,262 | 434,777 | 1,017,364 | 1,006,185 | 965,472 |
| நிலையான சொத்துகள் | 762,641 | 780,718 | 762,560 | 798,657 | 802,775 | 3,133,903 | 3,203,159 | 3,117,911 | 2,974,013 | 3,656,401 |
| குறுகிய கால முதலீடு | 429,896 | 913,443 | 1,027,388 | 1,175,754 | 926,461 | 369,761 | 474,984 | 3,040,316 | 3,452,508 | 4,398,099 |
| மொத்த சொத்துகள் | 2,294,113 | 2,386,449 | 2,700,885 | 2,902,284 | 3.073,637 | 6,229,453 | 7,185,386 | 7,829,711 | 8,680,301 | 14,013,711 |
| ஊழியர் எண்ணிக்கை | 211 | 226 | 229 | 248 | 274 | 276 | 276 | 291 | 329 | 336 |

மொத்த சொத்துகள் = மொத்த நடைமுறையற்ற சொத்துகளின் தேறிய புத்தகப் பெறுமதி + மொத்த நடைமுறைச் சொத்துகள்

# கூட்டிணைவுத் தகவல்கள

## கூட்டிணைவுத் தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்**
இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

**சட்ட அமைப்பு**
1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

**கூட்டிணைக்கப்பட்ட திகதி**
ஜுன் 04, 1987

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**
இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்ரேட், இரத்மலானை, இலங்கை

**பணிப்பாளர் சபை**

| | | |
|---|---|---|
| டாக்டர். பி. பி. ஜி. பி. யு. இந்ரவன்ச | - | தலைவர் |
| டாக்டர். பந்துல சந்ரநாத் விஜயசிறிவர்த்தன | - | பணிப்பாளர் |
| எஸ்.ஏ. சந்திரிகா குலதிலக | - | பணிப்பாளர் (2022 பங்குனி மாதம் வரை) |
| வி.ஜி. சமிந்த விக்ரமரத்ன | - | பணிப்பாளர் |
| செல்வி. யு.எஸ்.கே. தெனவத்த | - | பணிப்பாளர் |
| செல்வி. ஏ.ஆர். விக்ரமசிங்க | - | பணிப்பாளர் (2022 சித்திரை மாதத்தில் இருந்து) |

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் நாயகம், இல. 306,72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை.

**வங்கிகள்**
இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி

**முகாமைத்துவக் குழு**

| | | |
|---|---|---|
| எஸ்.டபிள்யு.ஜயசுந்தர | - | பொது முகாமையாளர் |
| ஏ.ஜி.டி.எஸ்.அதுரலிய | - | பிரதி பொது முகாமையாளர் (நிதி) |
| எஸ்.பி.ஜயவீர | - | பிரதி பொது முகாமையாளர் (உற்பத்தி) |
| பி.டி.ஜயசுந்தர | - | பிரதி பொது முகாமையாளர் (பொறியியல்) |
| ஆர்.தர்மதாச | - | பிரதி பொது முகாமையாளர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு) |
| ஆர்.எம்.ஜே.சி.கே. மடவல | - | பிரதி பொது முகாமையாளர் (மனித வளங்கள்ரூ |
| ஆர்.எம்.ஆர்.எம்.ரனசிங்க | - | பிரதி பொது முகாமையாளர் (மருந்து வடிவம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) - பதிற்கடமை |
| எச்.கே.பி.ஏ.சேனாதீர | - | பிரதி பொது முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு)-பதிற்கடமை |
| டி.எச்.ஜே.குணவர்தன | - | முகாமையாளர் (பொறியியல்) |
| ஜே.எம்.எஸ்.ஜயசுந்தர | - | முகாமையாளர் (நிதி) |
| ஏ.சி.பி.ஆனந்தகுமார | - | முகாமையாளர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு) |
| ஏ.எம்.ரி.பி.குலசேகர | - | முகாமையாளர் (விற்பனை மேம்பாடு) |
| வி.ஜே.பண்டாரவத்த | - | உள்ளகக் கணக்காய்வாளர் |
| அமில நுவன் ஹேவகம | - | முகாமையாளர் (உற்பத்தி) |
| பு.தந்தநாராயண | - | முகாமையாளர் (உற்பத்தி) |
| பி.வி.எச்.பி.எஸ்.குமார | - | முகாமையாளர் (பொறியியல்) |
| சமந்த விக்ரமசிங்க | - | முகாமையாளர் (உற்பத்திரூ |
| வை.எம்.பி. குமார | - | முகாமையாளர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவுரூ |
| சி.டி.மகினாராச்சி | - | முகாமையாளர் (மனித வளங்கள்) |
| ஏ.பி.எம்.விக்ரமநாயக | - | முகாமையாளர் (உற்பத்தி) |
| எம்.பெனரகம | - | முகாமையாளர் (பொறியியல்) |